| | **மொத்த நிலுவை (ரூ)** | | | | | **8,813.65** |
| | **குறைந்தபட்ச நிலுவைத் தொகை (MAD)** | | | | | **1,953.65** |

MAD = 2%* (5,000 + 2,000) +
100%* (1,000 + 180 + 500 + 90 +36.99 +6.66) = 1953.65
குறைந்தபட்ச நிலுவைத் தொகை ரூ. 1953.65 ஆகும்

நீங்கள் ரூ.5,000 செலவு செய்து மற்றும் ஒவ்வொரு மாதமும் (குறைந்தபட்ச தொகை ரூ.100க்கு உட்பட்டு) குறைந்த பட்ச நிலுவைத் தொகையை மட்டும் திரும்ப செலுத்தினால், மொத்த தொகையையும் திரும்ப செலுத்த 7 வருடங்கள் வரை ஆகும். அதனால் உங்கள் பணப் புழக்கம் எப்போதெல்லாம் அனுமதிக்கிறதோ, அப்போதெல்லாம் நீங்கள் உங்கள் மொத்த நிலுவைத் தொகையையோ அல்லது உங்கள் குறைந்தபட்ச நிலுவைத் தொகையை விட கணிசமாக அதிகமான ஒரு தொகையையோ செலுத்த நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் – EMI/கடன் முன் கூட்டியே திரும்ப செலுத்துதல்**

10 நவம்பர் 2023-லிருந்து, ஒரு கடன் வசதி/கடன், கார்டு வைத்திருப்பவரால் கடன் வசதி/ கடன் காலத்தின் போது முன் கூட்டியே செலுத்தப் பட்டால், கடைசியாக பில் செய்யப்பட்ட தேதியிலிருந்து வங்கிக்கு கடன் வசதி/கடன் செலுத்தப்படும் தேதி வரை மொத்த நிலுவைத் தொகையையும் (நிலுவையில் இருக்கும் முதல், மற்றும் முன் கூட்டியே திரும்ப செலுத்தும் கட்டணம் மற்றும் கடன் செலுத்தும் வரையிலான நாட்களுக்கான வட்டி உள்ளிட்ட தொகை) திரும்ப செலுத்த கார்டு வைத்திருப்பவர் பொறுப்பாவார். அது போன்ற நிலையில் கீழிருப்பவை கார்டு அறிக்கையில் வட்டிக் கட்டணத்திற்கான உள்ளீடுகளாக இருக்கும்:

- A = கடனின் மொத்த பாக்கி காலத்திற்கான வட்டி டெபிட் செய்யப்படும் (அதாவது, கடைசி பில்லிங் தேதியிலிருந்து கடனை திரும்ப செலுத்தும் தேதி வரை)
- B = முன் கூட்டியே கடனை செலுத்தியதற்கு பிறகான காலத்திற்கு உரிய வட்டி (அதாவது, முன் கூட்டியே செலுத்திய தேதியிலிருந்து கடன் வசதியை செலுத்தி முடிக்க வேண்டிய தேதி வரையான காலம்) கார்டு கணக்கிற்கு வரவு வைக்கப்படும்.

கடைசி பில்லிங் தேதியிலிருந்து கடனை முன் கூட்டியே செலுத்திய தேதி வரையான நாட்களுக்கு நிகர வட்டி, அதாவது (A- B), வாடிக்கையாளருக்கு பில் செய்யப்படும்.

கார்டு உறுப்பினர் சுழலும் கடன் வசதியை உபயோகித்தால், இந்த இருப்பு கிரெடிட் கார்டுக்கான பொருந்தக் கூடிய கட்டணங்கள் உள்ளிட்ட நிதிக் கட்டணங்களை ஈர்க்கும். இது போன்ற நிலுவையில் உள்ள தொகைகளை உடனடியாக செலுத்த கோர வங்கிக்கு உரிமை உண்டு.

**எடுத்துக்காட்டு:** அனைத்து முந்தைய நிலுவைத் தொகைகளையும் முழுதாக செலுத்தப் பட்டிருக்கிறது என்றும், உங்கள் கிரெடிட் கார்டு கணக்கில் எந்த தொகையும் நிலுவையில் இல்லை என்றும் மற்றும் உங்கள் மாதாந்திர அறிக்கை ஒவ்வொரு மாதமும் 25ம் தேதியில் உருவாக்கப்படுகிறது என வைத்துக் கொள்வோம். மே 3, 23 அன்று நீங்கள் 6 மாதங்களுக்கான ரூ. 5,000-த்திற்கான EMI இருப்புடன் (BoE) 14% வட்டி விகிதம் சேர்த்து உங்கள் இருப்பை கணக்கெடுத்திருக்கிறீர்கள். ஜூலை ‘23 வரை 2 EMIகள் கழிக்கப் பட்டிருக்கின்றன மற்றும் நீங்கள் 17 ஜூலை ’23 அன்று முன் கூட்டியே கடனை செலுத்த கோரியிருக்கிறீர்கள்.

| **தேதி** | **பரிவர்த்தனை வகை** | **தொகை (ரூ.)** | **விளக்கம்** |
|---|---|---|---|
| 3 மே'23 | பயன்படுத்தப்பட்ட BOE (EMI மீதான இருப்பு) | INR 5,000 | கிரெடிட் கார்டு மீதான பயன்படுத்தப்பட்ட BOE (EMI மீதான இருப்பு) |
| 2 ஜூன்'23 | முதல் EMI தொகை | INR 867.69 Dr | கழிக்கப்பட்ட EMI தொகை ரூ.867.69 (முதல் = ரூ.809.36, வட்டி = ரூ.58.33) |
| 2 ஜூன்'23 | வட்டியின் மீதான ஜிஎஸ்டி | INR 10.50 Dr | வட்டியின் மீது ஜிஎஸ்டி @ 18% 58.33*18% = ரூ. 10.50 |

| | | | |
|---|---|---|---|
| 2 ஜுலை'23 | 2வது EMI தொகை | INR 867.69 Dr | கழிக்கப்பட்ட EMI தொகை ரூ.867.69 (முதல் = ரூ.818.80, வட்டி = ரூ.48.89) |
| 2 ஜுலை'23 | வட்டியின் மீதான ஜிஎஸ்டி | INR 8.80 Dr | வட்டியின் மீது ஜிஎஸ்டி @ 18% 58.33*18% = ரூ. 10.50 |
| 17 ஜுலை'23 | EMIகள் # 3லிருந்து 6 வரையிலான BOE வட்டி பற்றை முன் கூட்டியே செலுத்துதல் | INR159.08 Dr | முன் கூட்டியே செலுத்தும் கோரிக்கை தேதி 17 ஜுலை '23. மீதியிருக்கும் காலத்திற்கான வட்டி பற்று (3ம் தேதி ஜுலை '23லிருந்து 2ம் தேதி நவம்பர் '23) 3371.84*14%*123 நாட்கள்/365 நாட்கள் = 159.08 (ரூ.3371.84 நிலுவையில் உள்ள முதலின் இருப்பு) |
| 17 ஜுலை'23 | மேற்கூறிய வட்டியின் மீதான ஜிஎஸ்டி | INR 28.63 Dr | 159.08*18% = INR 28.63 |
| 17 ஜுலை'23 | வட்டி தவணை ரிவர்ஸல் | INR 140.97 Cr | பயன்படுத்தப்படாத காலத்திற்கான வட்டி ரிவர்ஸல் (17ம் தேதி ஜுலை '23 லிருந்து 2ம் தேதி நவம்பர் '23 வரை) 3371.84*14%*109 நாட்கள்/365 நாட்கள் = ரூ.140.97 (ரூ 3371.84 நிலுவையில் உள்ள முதலின் இருப்பு) |
| 17 ஜுலை'23 | ஜிஎஸ்டி ரிவர்ஸல் | INR 25.37 Cr | 140.97*18%= INR 25.37 |
| | அமலிலிருக்கும் நிகர வட்டி | INR 18.11 | கடைசி பில்லிங் தேதியிலிருந்து கடன் செலுத்தப்பட்ட தேதி வரையிலான வட்டி |
| | அமலிலிருக்கும் நிகர ஜிஎஸ்டி | INR 3.26 | மேலிருக்கும் நிகர வட்டியின் மீதான ஜிஎஸ்டி |

எல்லா ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டுகளுக்கும் கிரெடிட் கார்டு மீதான உடனடி கடன் மீது, EMIக்கு மாற்றுதல், வணிகர் இடத்தில் (மெர்ச்சண்ட் EMI) அல்லது அதன் பின் (EMI பரிவர்த்தனை) பரிவர்த்தனையை EMIக்கு மாற்றுதல் போன்றவற்றிற்கு மேற்கூறிய கட்டணங்கள் பொருந்தும். கடனை முன் கூட்டியே செலுத்துவது தொடர்பான மற்ற எல்லா கட்டணங்களும் தற்போதிருக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படியே தொடரும். கீழிருக்கும் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பார்க்கவும்:

- கிரெடிட் கார்டு மீதான கடன் – https://www.axis.bank.in/important-links/credit-card/card-services
- இருப்பை EMI க்கு மாற்றுதல் – https://www.axis.bank.in/important-links/credit-card/card-services
- பரிவர்த்தனையை EMI க்கு மாற்றுதல் (TEMI) – https://www.axis.bank.in/important-links/credit-card/card-services
- வணிகர் EMI (MEMI) - https://www.axis.bank.in/important-links/credit-card/card-services

### A) கடன் மற்றும் பணம் திரும்பப் பெறுதல் / அட்வான்ஸ் கட்டணம்

- **கடன் வரம்பு:** இது கார்டுதாரருக்கு வழங்கப்பட்ட வரம்பு. எல்லா பரிவர்த்தனைகள், கட்டணங்கள் உள்ளிட்ட அனைத்து செலவுகளுக்கான மொத்த நிலுவைத் தொகைகளும் இந்த வரம்பை தாண்டக் கூடாது. முதன்மை கார்டுதாரருக்கு நிர்ணயிக்கப்பட்ட வரம்பை கூடுதல் கார்டுதாரர்(களும்), பகிர்ந்து கொள்வார்கள். முதன்மை கார்டுதாரரின் கடன் வரம்பில் செய்யப்படும் எந்த மாற்றமும், அது அதிகரிப்போ, குறைப்போ எதுவானாலும், அது அவருடன் தொடர்புடைய கூடுதல் கார்டுதார்ர்களுக்கும் தானாகவே பொருந்தும்.

- **ரொக்க வரம்பு:** இது கார்டு வைத்திருப்பவருக்கு ஒதுக்கப்பட்ட ரொக்க முன்பண வரம்பு. இந்த வரம்பு, கடன் வரம்பை விடகுறைந்தது, மற்றும் இது ஒட்டுமொத்த கடன் வரம்பின் ஒரு துணைக்குழு ஆகும்.

  ஏடிஎம்களில் இருந்து பணம் எடுப்பதற்கு ஒரு பரிவர்த்தனை கட்டணம் விதிக்கப் படுகிறது. மேலும், பணம் செலுத்துவதற்கு உரிய தேதிக்கு முன்பாகவே 100% இருப்புத் தொகையை செலுத்துவதைப் பொறுத்தே திரட்டப்படும் வட்டி அமையும் சில்லறை கொள்முதல்களைப் போலல்லாமல், ரொக்கப் பரிவர்த்தனைகளுக்கு, எப்பொழுதும் பரிவர்த்தனை தேதியிலிருந்து வட்டி திரட்டப் படுகிறது.

- **கிடைக்கக் கூடிய கடன் வரம்பு:** எந்த நேரத்திலும், கிடைக்கக் கூடிய கடன் வரம்பு அந்த நேரத்தில் நிலுவையில் உள்ள கார்டு இருப்பு மற்றும் ஒதுக்கப்பட்ட கடன் வரம்புக்குமான வித்தியாசமாகும். முதன்மை கார்டு உரிமையாளருக்குரிய கடன் வரம்பை கூடுதல் கார்டு வைத்திருப்பவர்(களும்) பகிர்ந்து கொள்வார்கள்.

- **கிடைக்கக் கூடிய ரொக்க வரம்பு:** எந்த நேரத்திலும், கிடைக்கக் கூடிய ரொக்க வரம்பு அந்த நேரத்தில் நிலுவையில் உள்ள ரொக்க இருப்புக்கும் மற்றும் ஒதுக்கப்பட்ட ரொக்க வரம்புக்குமான வித்தியாசமாகும்.

- **சர்வதேச வரம்பு:** சர்வதேச வரம்பு என்பது ஒரு வாடிக்கையாளருக்கு ஒதுக்கப்பட்ட சர்வதேச பயன்பாட்டிற்கான வரம்பு. கிரெடிட் கார்டு வாடிக்கையாளர்களில் எவர் விண்ணப்பிக்கும் போதே சர்வதேச உபயோகத்திற்கு விருப்பத் தேர்வு அளித்திருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே பொருந்தும். உங்கள் வெல்கம் கிட் (Welcome Kit)-ல் குறிப்பிடப் பட்டிருக்கும் வரம்பு இது.
- இந்த கடன், ரொக்க மற்றும் சர்வதேச வரம்பு (ஏதேனும் இருப்பின்) ஒவ்வொரு கார்டுதாரருக்கும் மாறுபடும். கார்டுதாரருக்கு கார்டை வழங்கும் நேரத்தில் வரவேற்பு கடிதத்தில் (Welcome Letter) இந்த வரம்பு தெரியப் படுத்தப் படும், மற்றும் இது கார்டுதாரருக்கு மாதாந்திர அறிக்கையிலும் தெரியப் படுத்தப்படும். ஒவ்வொரு மாதாந்திர அறிக்கையும் தயாரிக்கப்படும் நேரத்தில் கிடைக்கக் கூடிய கடன் வரம்பு அதில் ஒரு பகுதியாக வழங்கப்படும்.
- **பல கார்டுகள் – வரம்பு பகிர்வு:** ஆக்ஸிஸ் பேங்க் தனது விருப்புரிமையின் அடிப்படையில், கார்டு வைத்திருப்பவர் தற்போது வைத்திருக்கும் கார்டு வகையிலிருந்து மாறுபட்ட ஒரு கார்டு வகையை வழங்கும் உரிமையைக் கொண்டுள்ளது. எந்த கிரெடிட் கார்டின் மீதும் எந்தவொரு நேரத்திலும், கடன் வரம்புகள் மற்றும் ரொக்க வரம்புகள் ஆக்ஸிஸ் பேங்கின் தனிப்பட்ட விருப்புரிமையின் அடிப்படையிலேயே இருக்கும். உங்களது எல்லா ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டுகளுக்கும் கடன் வரம்பு பகிரப் படுகிறது. உங்கள் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டின் மீது வெவ்வேறு கடன் வரம்புகள் இருந்தாலும், ஒருங்கிணைக்கப்பட்ட பயன்பாடு பகிரப்பட்ட வரம்புக்குள் கட்டுப்படுத்தப்படும். ஒவ்வொரு கார்டைப் பொறுத்த வரையிலுமான வரம்பு அல்லது வாடிக்கையாளரது பகிரப்பட்ட வரம்பு போன்றவை பேங்கின் உள் வழிகாட்டுதல்களின் படி பேங்கின் தனிப்பட்ட விருப்புரிமையின் அடிப்படையிலேயே முடிவு செய்யப்படும். நிலுவையில் உள்ள தொகை கிரெடிட் கார்டுக்கு ஒதுக்கப்பட்ட கடன் வரம்பை மீறும் வழ்நிலைகளில் வரம்பு மீறிய கட்டணம் பொருந்தும்.

  ஆக்ஸிஸ் பேங்க் வாடிக்கையாளரின், அவள்/அவரது தற்போதைய கிரெடிட் கார்டு(கள்) -க்கான சமீபத்திய விண்ணப்பத்திலிருக்கும் (ஏதேனும் இருப்பின்) மக்கள் தொகை தொடர்பான மற்றும் தனிப்பட்ட விவரங்களை புதுப்பிக்க உரிமை பெற்றிருக்கிறது.

  ஒரு வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டுகளின் அதிகபட்ச எண்ணிக்கை வங்கியின் உள் கொள்கைகள் மற்றும் தீர்மானத்திற்கு உட்பட்டது.
- வாடிக்கையாளார் வைத்திருக்கும் கிரெடிட் கார்டுகளின் கடன் வரம்புகள் தற்போதிருக்கும் வங்கியின் உள் கொள்கை வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டவை மற்றும் வங்கியின் தனிப்பட்ட முடிவின் அடிப்படையிலானவை. ஒரு வேளை வாடிக்கையாளர், பல ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டுகளை வைத்திருந்தால், வரம்பு எல்லா கார்டுகளிடையேயும் பகிரப் படுகிறது மற்றும் எல்லா கார்டுகளுக்கும் சமமாக இருக்கும். உ.ம். வாடிக்கையாளருக்கான கடன் வரம்பு ரூ.1,00,000 ஆக இருந்தால் மற்றும் வாடிக்கையாளர் ஆக்ஸிஸ் பேங்கின் இரண்டு கார்டுகளை

வைத்திருந்தால் ஒவ்வொரு கார்டுக்கான தனிப்பட்ட வரம்பும் ரூ.1,00,000 ஆக இருக்கலாம் மற்றும் இரண்டு கார்டுகளுக்குமிடையே பகிரப்படும். வாடிக்கையாளர் ரூ. 90,000 மதிப்பிற்கான பரிவர்த்தனைகளை கார்டு ஏ-யில் செய்தால், கார்டு பி-யில் எந்த செலவும் செய்யப்படா விட்டாலும், இரண்டு கார்டுகளுக்கிடையே மீதமிருக்கும் உபயோகிக்க கூடிய கடன் வரம்பு ரூ,10,000 ஆக மட்டுமே இருக்கும். இந்த சூழ்நிலையில், வாடிக்கையாளரின் மொத்த வரம்பு கார்டு ஏ-யில் ரூ.1,00,000 மற்றும் கார்டு பி-யில் ரூ.1,00,000 ஆக இருக்காது.

- ஒரு வேளை வாடிக்கையாளர் ஆக்ஸிஸ் பேங்கின் ஒரு கார்டு வைத்திருக்கிறார் மற்றும் வங்கியிலிருந்து மற்றொரு கார்டுக்கு விண்ணப்பித்திருக்கிறார் என்றால், முதல் கார்டுக்கு பொருந்தக் கூடிய அதே வரம்பு இரண்டாவது கார்டுக்கும் பொருந்தும். எனினும், இரண்டாவது கார்டுக்கு விண்ணப்பிக்கும் போது, வாடிக்கையாளர் அதிக வரம்புக்கு மதிப்பாய்வு செய்யப்பட்டு அதற்கு இரண்டாவது கார்டின் விண்ணப்பத்தின் வழியாக ஒப்புதல் அளித்திருந்தால், திருத்தப்பட்ட வரம்பு எல்லா கார்டுகளுக்கும் பொருந்தும். அதாவது, ஏற்கனவே இருக்கும் கார்டு மற்றும் வாடிக்கையாளருக்கு புதிதாக வழங்கப்பட்டிருக்கும் கார்டு இரண்டுக்கும் பொருந்தும்.
- வாடிக்கையாளர் வைத்திருக்கும் கார்டு(களு) க்கான கடன் வரம்பை அவ்வப்போது மதிப்பாய்வு செய்ய (வரம்பை குறைப்பது அல்லது அதிகரிப்பது உள்ளிட்டவை) தன் தனிப்பட்ட விருப்புரிமையின் பேரில் ஆக்ஸிஸ் பேங்குக்கு உரிமை உண்டு. அந்த மதிப்பாய்வின் அடிப்படையில் வாடிக்கையாளருக்கு வரம்பு அதிகரிப்பு சலுகை (செல்லுபடியாவதற்கான குறிப்பிட்ட காலக் கெடுவுடன்) அளிக்கப்படும் மற்றும் வாடிக்கையாளரின் வெளிப்படையான ஒப்புதலில், அந்த வரம்பு அதிகரிப்பு வாடிக்கையாளர் வைத்திருக்கும் எல்லா கிரெடிட் கார்டுகளுக்கும் செயலாக்கப்படும். இது செயலாக்கப் படும் நேரத்தில் நிகழ் நேர சரிபார்ப்புகளுக்கு உட்பட்டது. கடன் வரம்பு அதிகரிப்பு, கோரிக்கை மீதான நடவடிக்கை எடுக்கப் பட்ட தேதியில் கிரெடிட் கார்டு கணக்கு தகுதியானதா என்பதை பொறுத்தது மற்றும் அது 3 வேலை நாட்களுக்குள் செயல் படுத்தப்படும்.
- வங்கிக்கு தேவைப்படும் ஆவணங்களை சமர்ப்பிப்பதன் அடிப்படையில் வாடிக்கையாளர்கள் தமது நடப்பு கடன் வரம்பை மறு பரிசீலனை செய்யக் கோரலாம். இந்த ஆவணங்களை பகிர்வது வங்கிக்கு வாடிக்கையாளரிடமிருந்து நேரடியாகவோ, அல்லது துணை நிறுவனங்களிடமிருந்தோ அல்லது கடன் தகவல் நிறுவனங்கள், ஒழுங்குமுறை அமைப்புகள் அல்லது அரசு அதிகாரிகள் போன்ற தனிப்பட்ட தரவுகளை வைத்திருக்கக்கூடிய மூன்றாம் தரப்பினரிடமிருந்தோ தனிப்பட்ட தரவுகளை பெறுவதற்கான ஒப்புதலை அளித்ததற்கு ஈடாகும். அது போன்ற மறு பரிசீலனை மற்றும் மேம்பாடு (ஏதேனும் இருப்பின்) வங்கியின் தனிப்பட்ட முடிவுக்கு உட்பட்டது. அத்தகைய கோரிக்கைகள் 7 வேலை நாட்களுக்குள் செயல்படுத்தப்படும்.

- **பயன்பாடு குறித்த ஆர்பிஐ (RBI) வழிகாட்டுதல்கள்**

  ஆர்பிஐ (RBI) வழிகாட்டுதல்கள் படி, அனைத்து கார்டுகளும் இந்தியாவிலுள்ள தொடர்பு அடிப்படையிலான உபயோக மையங்களில் மட்டுமே (ஏடிஎம்கள் மற்றும் பிஓஎஸ்கள் அதாவது, விற்பனை மைய சாதனங்கள்) பயன்படுத்த அனுமதிக்கப்படும். மொபைல் வங்கி செயலி, **திறந்த**, இன்டர் நெட் பேங்கிங் அல்லது வாடிக்கையாளர் சேவை மையம் / அருகேயுள்ள கிளையை அணுகுவது போன்றவற்றின் மூலம் தொடர்பு இல்லாத, சர்வதேச, ஆன்லைன் பரிவர்த்தனைகளை இயக்குவது அல்லது முடக்குவதன் மூலம் நீங்கள் உங்கள் பயன்பாட்டு விருப்பத் தேர்வுகளை அமைக்கலாம் அல்லது மாற்றலாம் மற்றும் கார்டின் பரிவர்த்தனை வரம்புகளை நிர்வகிக்கலாம். உங்கள் கார்டின் முன்புறம் உள்ள தொடர்பு இல்லை என்பதற்கான சின்னம் உங்கள் கார்டு தொடர்பற்ற ஒப்புதலுக்கு தயார் என்பதை குறிக்கிறது. உங்கள் கார்டிலுள பிளாஸ்டிக் மேற்கூறிய எந்த பரிவர்த்தனையையாவது ஆதரிக்கவில்லையெனில், நீங்கள் உங்கள் தேர்வுகள்/வரம்புகளை செயலாக்க அல்லது முடக்க முடியாது, எனவே உங்கள் கோரிக்கைக்கு நீங்கள் வாடிக்கையாளர் சேவை மையத்தை அழைக்கவும் அல்லது ஒரு கிளையை அணுகவும்.

**B) வட்டியில்லா கடன் காலம்**

வட்டியில்லா கடன் காலம் 20 முதல் 50 நாட்கள் வரை, பரிவர்த்தனை தேதியைப் பொறுத்து அமையக் கூடும். முந்தைய மாதத்தின் பில் தொகையில் ஏதாவது உரிய தேதியில் செலுத்தப் படாத நிலுவைத் தொகை இருந்தால் தற்போதைய ஸ்டேட்மெண்டின் வட்டியில்லா கடன் காலம் இடை நிறுத்தப்படும்.

**சலுகை காலத்தை கணக்கிடுவதற்கான எடுத்துக்காட்டு:** ஜூன் 21-லிருந்து ஜூலை 21 வரையான அறிக்கைக்கு, பணம் செலுத்துவதற்கு உரிய தேதி ஆகஸ்ட் 10-ஆக இருக்கும். நீங்கள் முந்தைய மாத அறிக்கையின் படி செலுத்த வேண்டிய மொத்த தொகையையும் செலுத்த வேண்டிய தேதிக்கு முன்னரே செலுத்தி விட்டதாக வைத்துக் கொண்டால், சலுகை காலம் :

1. ஜூன் 24 தேதியிட்ட ஒரு கொள்முதலுக்கு, வட்டி-இல்லா சலுகை காலம் ஜூன் 24 – ஆகஸ்ட் 10, அதாவது 47 நாட்கள்.

2. ஜூலை 18-ம் தேதி செய்யப்பட்ட ஒரு கொள்முதலுக்கு, வட்டி-இல்லா சலுகை காலம் ஜூலை 18-லிருந்து ஆகஸ்ட் 10 வரை, அதாவது 23 நாட்கள்.

எனவே, சலுகை காலம் கொள்முதல் தேதிக்கேற்ப மாறலாம். எனினும், முந்தைய மாதம் செலுத்த வேண்டிய மொத்த தொகை, உரிய தேதியில் செலுத்தப் படா விட்டால், இலவச கடன் காலத்தை இழக்க வேண்டியிருக்கும்

மற்றும் எந்த வட்டி-இல்லா காலமும் இருக்காது. ரொக்க முன்பணத்திற்கு, பரிவர்த்தனை தேதியிலிருந்து பணம் செலுத்தும் தேதி வரை, வட்டி வசூலிக்கப் படுகிறது.

**C) பில்லிங் மற்றும் அறிக்கை**

i) கட்டண அறிக்கை – உங்கள் கார்டு கணக்கில் ரூ.100க்கு மேல் நிலுவைத் தொகை இருந்தால், வங்கியின் பதிவுகளில் உள்ள உங்கள் அஞ்சல் முகவரி அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு, வங்கி மாதம் ஒருமுறை ஒரு அறிக்கை/மின் அறிக்கையை அனுப்பும். இந்த அறிக்கை கிடைக்கா விட்டாலும் , அது இந்த ஒப்பந்தத்தின் கீழ் உங்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் எந்த விதத்திலும் பாதிக்காது. மற்றும் உங்கள் கார்ட் கணக்கில் நிலுவையில் உள்ள தொகையை உரிய தேதியில் செலுத்துவதற்கும் நீங்கள் பொறுப்பாவீர்கள். தங்கள் அறிக்கை உருவாகும் தேதியை வங்கியின் தற்போதைய கட்டண சுழற்சி தேதிகளில் ஒன்றிற்கு மாற்றுவதற்கு வாடிக்கையாளர்கள் ஒரு முறை ஆக்ஸிஸ் வங்கியின் தொலைபேசி வங்கி சேவையை தொடர்பு கொள்ள விருப்பத் தேர்வை பெற்றிருக்கிறார்கள். ஆக்ஸிஸ் வங்கியால் வழங்கப் பட்டிருக்கும் கட்டண சுழற்சி தேதிகள் மாதத்தின் 1, 7,10,12,13 15,18, 20, 22, மற்றும் 25 தேதிகளாகும். மற்றும் நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு உட்பட்டு, கட்டணத் தொகையை செலுத்துவதற்கான தேதி கட்டண சுழற்சி தேதியிலிருந்து 20 நாட்களுக்குப் பின் அமையும்.

ii) வங்கி, கார்டு கணக்கை வணிக நிறுவனங்களிடமிருந்து பெற்ற எல்லா பற்றுகளுக்கும் மற்றும் ஏற்படும் கட்டணங்களுக்கும் டெபிட் செய்யும் மற்றும் கார்டுதாரர் வங்கிக்கு செலுத்தும் எல்லா தொகைக்கும் மற்றும் கார்டுதாரருக்கு செலுத்தப்படும் எந்தவொரு தொகைக்கும் கார்டு கணக்கில் வரவு வைக்கப் படும். வங்கி, கார்டு கணக்கை வணிக நிறுவனங்களிடமிருந்து பெற்ற எல்லா பற்றுகளுக்கும் மற்றும் ஏற்படும் கட்டணங்களுக்கும் டெபிட் செய்யும் மற்றும் கார்டுதாரர் வங்கிக்கு செலுத்தும் எல்லா தொகைக்கும் மற்றும் கார்டுதாரருக்கு செலுத்தப்படும் எந்தவொரு தொகைக்கும் கார்டு கணக்கில் வரவு வைக்கப் படும்.

iii) கார்டு தாரருக்கு வங்கி சுழலும் கடன் வசதியை வழங்கலாம் அதன்படி கார்டுதாரர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி குறைந்தபட்ச நிலுவை தொகையை (MAD) மட்டுமே செலுத்த தேர்வு செய்யலாம். கார்டு தாரரின் மொத்த நிலுவைத் தொகை (TAD) அல்லது குறைந்தபட்ச நிலுவை தொகையை (MAD) அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பணம் செலுத்த வேண்டிய தேதியிலோ அல்லது அதற்கு முன்போ கார்டுதாரரால் செலுத்தப் பட வேண்டும்.

iv) உரிய தேதியில் MADஐ செலுத்த தவறினால், ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டை திரும்பப் பெறும் அல்லது இடை நிறுத்தும் (தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ) அபாயத்துக்கு நீங்கள் உள்ளாகலாம். அது போல பணம் செலுத்த தவறியதற்கும் ஒரு கட்டணம் விதிக்கப்படும். வங்கி, அதன் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் வணிக நிறுவனங்களுக்கும் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டை மதிக்க வேண்டாம் என அறிவுறுத்தலாம் மற்றும்/அல்லது கார்டு சங்க அமைப்பில் கார்டு எண்ணை ஹாட் லிஸ்ட் செய்து கார்டை திரும்பப் பெறுமாறு அறிவுறுத்தலாம்.

v) பில்லிங் காலத்தில், உரிய தேதிக்கும் முன்னரே ஒரு முறைக்கும் மேலாக, நீங்கள் குறைந்தபட்ச நிலுவை தொகையை செலுத்தலாம், அல்லது கார்டு கணக்கில் நிலுவையில் உள்ள மீதத் தொகையை உரிய தேதிக்கு முன்னரே எந்த நேரத்திலும் செலுத்தலாம்.

vi) கார்டு கணக்கில் உள்ள நிலுவைத் தொகைக்காக செலுத்திய பணம் அடுத்தடுத்த அறிக்கைகளில் ஒப்புக் கொள்ளப் படும். கார்டு உறுப்பினரின் கார்டு மீதான நிலுவைத் தொகை கீழ் வருமாறு பிரிக்கப் படும்:

1. ஃபீஸ் மற்றும் வரிகள் உள்ளிட்ட கட்டணங்கள்
2. வட்டி கட்டணங்கள்
3. ரொக்க முன்பணம்
4. EMI
5. கொள்முதல்கள்

vii) உங்களால் வழங்கப்பட்ட எந்த கட்டண அறிவுறுத்தலும் பின்பு நிராகரிக்கப்பட்டால், கார்டு சலுகைகள் இடை நிறுத்தப்படலாம்/ நிறுத்தப்படலாம் மற்றும் கட்டண அட்டவணையில் குறிப்பிட்டுள்ள படி ஒரு கட்டணம், வங்கியின் தனிப்பட்ட முடிவின் படி கார்டு கணக்கிற்கு விதிக்கப்படும். அத்தகைய கட்டணத் தொகை வங்கியின் தனிப்பட்ட முடிவுக்குட்பட்டு மாறக் கூடியது. எந்த பொருத்தமான சட்ட நடவடிக்கைகளையும் தொடங்க வங்கிக்கு உரிமை உண்டு.

viii) மாதாந்திர கணக்கு அறிக்கைகளின் நகல், உங்கள் கோரிக்கைக்கு முன்னரே, கட்டண அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சேவைக் கட்டணத்தை செலுத்துவதற்கு உட்பட்டு வங்கியால் வழங்கப் படும். இது வங்கியின் விருப்பத்தின் அடிப்படையில் இது மாற்றப்படலாம்.

ix) உங்கள் தொடர்பு முகவரி / மின்னஞ்சல் முகவரி-யில் ஏதேனும் மாற்றம் இருந்தால் , அறிக்கைகளை வழக்கமான மற்றும் உரிய நேரத்தில் நீங்கள் பெறுவதற்கு வங்கியை உடனடியாக தொடர்பு கொண்டு முகவரியை புதுப்பித்துக் கொள்ளும் படி நீங்கள் அறிவுறுத்தப் படுகிறீர்கள்.

x) அறிக்கை வெளியிடப்பட்ட 60 நாட்களுக்குள், ஏதேனும் முரண்பாடுகள்

இருந்தால், கார்டுதாரர்(கள்) அதை வங்கிக்கு தெரிவித்தாலேயன்றி, அறிக்கைகளின் அனைத்து உள்ளடக்கங்களும் சரியாக இருப்பதாகக் கொள்ளப்பட்டு கார்டுதாரர்(கள்)களால் ஒப்புக் கொள்ளப் பட்டதாக கருதப்படும். மேற்கூறிய முரண்பாடுகள் சட்டபூர்வமானதாக கண்டு பிடிக்கப் பட்டால், வங்கி அந்த கட்டணத்தை தனது அடுத்தடுத்த ஆய்வுகள் தன் முழு மற்றும் இறுதி திருப்திக்கு முடியும் வரை தற்காலிகமாக மாற்றலாம். வங்கியால் செய்யப்பட்ட ஆய்வுகள் அந்த கட்டணத்தின் பொறுப்பு அந்த கார்டுதாரர்(கள்)-க்கு சேரக் கூடியது என சுட்டி காட்டினால், அந்தக் கட்டணம் அடுத்த அறிக்கையில் மீட்டெடுக்கப்படும் மற்றும் ஃபீஸ்/கட்டணங்கள் வங்கியால் கட்டண அட்டவணைப்படி கோரப்படும்.

xi) ஈஎம் ஐ (EMI) வசதியை உபயோகித்து, அசல் பரிவர்த்தனையின் மீது ஏதேனும் வெகுமதிப் புள்ளிகள் திரட்டப் பட்டிருந்தால் அவை திருப்ப படும். எட்ஜ் வெகுமதி புள்ளிகள்/ எட்ஜ் மைல்கள்/ கேஷ்பேக் மற்றும் அனைத்து வகை வெகுமதி புள்ளிகளும் EMI-ஆக மாற்றப்பட்ட கிரெடிட் கார்டு பரிவர்த்தனைகளுக்கு டெபிட் செய்யப்படும். EMI ரத்து செய்யப்படும் பட்சத்தில், அசல் பரிவர்த்தனைக்கான கேஷ்பேக் மற்றும் இண்டிகோ ப்ளூசிப்ஸ் திரும்ப செலுத்தப்படும்.

## D) ஆக்ஸிஸ் பேங்க் ரு பே கிரெடிட் கார்டு ஆன் யூபி (UP)

பயனருக்கும் ஆக்ஸிஸ் பேங்குக்கும் இடையேயான ஒப்பந்தத்தை இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உருவாக்கும் மற்றும் இவை மேலே பட்டியலிடப் பட்டிருக்கும் கிரெடிட் கார்டு MITC-உடன் கூடுதலாக இருக்கும் மற்றும் அவற்றை மீறுவதாக இருக்காது. இந்த வசதி, தேவையான அடிப்படை தகுதிகளை பெற்றிருக்கும் பயனர்களுக்கு மட்டுமே கிடைக்கும் மற்றும் ஆக்ஸிஸ் பேங்கின் தனிப்பட்ட முடிவின் படியே வழங்கப்படும் மற்றும் ஆக்ஸிஸ் பேங்கால் எந்த நேரத்திலும், முன்னறிவிப்புடனோ அல்லது முன்னறிவிப்பின்றியோ நிறுத்தப் படலாம்.

**சேவை விதிமுறைகள்**

UPI-யில் கிரெடிட் கார்டுக்கான இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆக்ஸிஸ் பேங்கின் எந்த கணக்கிற்கும் அல்லது அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் எந்த வசதிக்கும் பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடுதலானவை.

1. பயனரின் கோரிக்கையின் பேரில் ஆக்ஸிஸ் பேங்க் ரு பே கிரெடிட் கார்டு ஒப்புதலுக்கு உட்பட்டு இந்த வசதி வழங்கப்படும்.

2. UPI செயலியுடன் இணைக்க வாடிக்கையாளர் தனது, ஆக்ஸிஸ் பேங்க் கார்டுடன் இணைக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணை உபயோகிக்க வேண்டும்.
3. ஆக்ஸிஸ் பேங்க் ரு பே கிரெடிட் கார்டை இயக்கவும், UPI செயலி மூலமாக கட்டண பரிவர்த்தனைகளை அங்கீகரிக்கவும் பயனர் ஒரு 6 இலக்க UPI பின்னை அமைக்க வேண்டும். UPI பரிவர்த்தனைகளை அங்கீகரிக்க கிரெடிட் கார்டின் 4 இலக்க பின் கணக்கில் எடுத்துக் கொள்ளப் பட மாட்டாது.
4. எல்லா வகை பரிவர்த்தனைகளுக்கும் கிரெடிட் கார்டை செயல்படுத்த UPI பின் அமைப்பு வாடிக்கையாளர் சம்மதமாக கருதப் படும்.
5. ரு பே நெட்வொர்க்கில் அனுமதிக்கப்பட்ட P2M பரிவர்த்தனைகளை மட்டுமே பயனர் செய்ய முடியும்.
6. உங்கள் UPI செயலியில் சர்வதேச பரிவர்த்தனைகள் செயல்படுத்தப் பட்டால், UPI பரிவர்த்தனைகளில் CC (கிரெடிட் கார்டு)-யும் அனுமதிக்கப்படும்.
7. P2P, P2PM மீதான பரிவர்த்தனைகள், டிஜிடல் கணக்கு துவக்கம், கடன் வழங்கும் தளம், வணிகரிடம் பணம் எடுப்பது, ஏடிஎம்-இல் பணம் எடுத்தல், ERUPI, IPO, வெளி நாட்டு உள் நோக்கிய பணம் அனுப்புதல், மியூச்சுவல் ஃபண்ட்கள் மற்றும் Axis Bank / RBI -யால் கட்டுப் படுத்தப்பட்ட வேறு எந்த வகை பரிவர்த்தனைகளும் அனுமதிக்கப்படாது.
8. வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட கடன் வரம்புகளுக்கு மேல், ஏற்கனவே இருக்கும் UPI பரிவர்த்தனை வரம்புகளும் பொருந்தும்.
9. கிரெடிட் கார்டு பரிவர்த்தனைகள் மீது பொருந்தும் எந்த ஃபீஸ், நிதி கட்டணங்கள், கூடுதல் கட்டணங்கள் அல்லது மார்க்-அப்களும் UPI பரிவர்த்தனைகளில் CC மீதும் பொருந்தும்.
10. UPI பரிவர்த்தனைகளில் CC யிலிருந்து பணம் எடுப்பதற்கு அனுமதி இல்லை.
11. UPI மீதான CCக்கு எதிரான எந்த பரிவர்த்தனையும் உங்கள் தற்போதைய கிரெடிட் கார்டு வரம்பிலிருந்து கழிக்கப்படும்.
12. ஆக்ஸிஸ் பேங்குடன் தொடர்பு கொள்வது மூலமோ அல்லது எந்த UPI செயலியில் பரிவர்த்தனை செய்யப்பட்டதோ அதன் வழியாகவோ கட்டணத்தை அல்லது பணத்தை திரும்பப் பெறலாம்.
13. எரிபொருள் கட்டணம் விதிக்கப்பட்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆக்ஸிஸ் பேங்க் ரு பே கிரெடிட் கார்டுகளின் தற்போதைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி இது தள்ளுபடி செய்யப்படும்.
14. ஆக்ஸிஸ் பேங்க் ரு பே கிரெடிட் கார்டை நிதியை பெறுவதற்கான முன்னிருப்பு விருப்பமாக இந்த வசதி ஏற்றுக் கொள்ளாது.
15. ஆக்ஸிஸ் பேங்க் ரு பே கிரெடிட் கார்டு ஒரு வேளை புதுப்பிக்கப்பட்டால், புதுப்பிக்கப்பட்ட கிரெடிட் கார்டு விவரங்களுடன், பயனர் UPI செயலியில் திரும்ப பதிவு செய்ய வேண்டும்.
16. சாதனம் மாற்றப்பட்டால், பயனர் கிரெடிட் கார்டுக்கு அதே சிம்-உடன் UPI செயலியில் திரும்ப பதிவு செய்து கொள்ள வேண்டும். முந்தைய சாதனத்தில் நிறுவப் பட்டிருந்த செயலி பதிவு நீக்கம் செய்யப்படும்.

17. MCC 6513 மூலமாக அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு வாடகை கட்டணத்திற்கும், வாடகை கூடுதல் கட்டணமாக 1% UPI பரிவர்த்தனை தொகை மீதான CC மீது விதிக்கப்படும்.

**E) கிரெடிட் கார்டின் பயன்பாடு**

• கிரெடிட் கார்டு தனிப்பட்ட செலவுகள் மற்றும் நோக்கங்களுக்காக மட்டுமே வழங்கப்படுகிறது. கார்டுதாரர் மறு விற்பனைக்கோ, வணிக ரீதியாகவோ அல்லது நிதி ஆதாயம் பெறுவதற்கான வணிக நோக்கங்களுக்கோ எதையும் வாங்குவதற்கோ, கிரெடிட் கார்டை உபயோகிக்க கூடாது. கிரெடிட் கார்டை சட்டபூர்வமான, நேர்மையான தனிப்பட்ட நோக்கங்களுக்கு மட்டுமே உபயோகிக்க வேண்டும். பண மோசடி, சமூக விரோத மற்றும் ஊகத்தின் அடிப்படையிலான நடவடிக்கைகளுக்கு அல்லது வணிகத்திற்கு (உ.ம். பணி மூலதன நோக்கங்களுக்காக) உபயோகிக்க கூடாது.

• சேருவதற்கான / வருடாந்திர கட்டணங்கள், அந்நிய செலாவணி மார்க் அப், ஜிஎஸ்டி/வாட் (GST/VAT), டிசிசி (DCC), எரிபொருள் கூடுதல் கட்டணம், தாமதமாக செலுத்துவதற்கான கட்டணம், வட்டி பற்று, வாடகை கூடுதல் கட்டணம், காசோலை திரும்புவதற்கான கட்டணம் தவிர மற்ற அனைத்து செலவுகளும் மைல்கல் செலவுகளாக கருதப் படுகின்றன.

• கார்டு உறுப்பினர்கள் அவர்கள் கிரெடிட் கார்டில் அதிக செலவு செய்யவும் மற்றும் அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகளை அங்கீகரிக்க செயற்கையாக தங்கள் அனுமதிக்கப் பட்ட கடன் வரம்பை உயர்த்தி கொள்வதற்கும் அனுமதிக்க பட மாட்டார்கள். அது போன்ற தேவை எழுமானால், கார்டு உறுப்பினர்கள் கடன் வரம்பை உயர்த்துவதற்கு வங்கியை அணுக அறிவுறுத்தப் படுகிறார்கள்.

• RBI ஆணைப்படி கட்டுப்படுத்தப்பட்ட MCC குறியீடுகளில் பரிவர்த்தனைகள் கவனிக்கப்பட்டால், கிரெடிட் கார்டை தடை செய்ய வங்கிக்கு உரிமை உண்டு.

• வங்கியின் ஒழுங்குமுறை வழி காட்டுதல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பொருந்தக் கூடிய கொள்கைகளின் படி கிரெடிட் கார்டு உபயோகப் படுத்த படுவதை உறுதி செய்ய, அவ்வப்போது ஆய்வு செய்ய வங்கிக்கு உரிமை உண்டு. ஒரு அறிக்கை சுழற்சியில் அனுமதிக்கப்பட்ட கடன் வரம்பை மீறிய உபயோகம் ஏதும் இருக்கிறதா, சில தேர்ந்தெடுக்கப்பட்ட வணிகர்களிடம் அசாதாரணமான அல்லது அதிகப்படியான உபயோகம், இருக்கிறதா மற்றொரு கிரெடிட் கார்டு/ கடன்கள் போன்றவற்றிற்கு திரும்ப செலுத்தப்பட்ட தொகை, சேமிப்பு கணக்கிற்கு நிதி மாற்றம், வணிகருடன் இருக்கக் கூடிய கூட்டு சேர்க்கை மற்றும்/ அல்லது தனிப்பட்டது அல்லாத வணிகம் தொடர்பான பயன்பாடு, உரியதல்லாத வெகுமதி புள்ளிகள்/ கேஷ்பேக்/மற்ற ஆதாயங்களைத் திரட்டுவதற்காக அம்சங்களின்/ சலுகைகளின்/ திட்டங்களின் அதிகப்படியான உபயோகம்/ தவறான பயன்பாடு போன்ற ஏதேனும்

இருந்தால் அடையாளங் காண, கிரெடிட் கார்டு உபயோகத்தை அவ்வப்போது ஆய்வு செய்ய வங்கிக்கு உரிமை உண்டு. அது போன்ற சூழ் நிலையில் ஆக்ஸிஸ் பேங்குக்கு, தன்னுடைய தனிப்பட்ட முடிவில், சம்பந்தப்பட்ட கிரெடிட் கார்டு மற்றும் கூடுதல்/சேர்ப்பு கார்டுகளையும் ரத்து செய்ய மற்றும் வாடிக்கையாளர் அளவில் சம்பாதித்த கேஷ்பேக்/வெகுமதி புள்ளிகளை கார்டுதாரருக்கு எந்த வித முன்னறிவிப்புமின்றி நிறுத்தி வைக்க/ரத்து செய்ய உரிமை உண்டு. மேலும், ஆக்ஸிஸ் பேங்க், தொலைபேசி மூலமோ அல்லது வேறு எந்த முறையான தொடர்பு வழிகள் மூலமோ கிரெடிட் கார்டு பரிவர்த்தனைகள், பயன்பாட்டு பாணி, போன்றவற்றிற்கான விவரங்கள், தகவல்கள், சான்றுகள் போன்றவைகளை விசாரிக்கலாம். கார்டுதாரரிடமிருந்து பதிலில்லா விட்டாலோ அல்லது திருப்திகரமான பதிலில்லா விட்டாலோ, அது ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டை தடுக்க/ மூட வழி வகுக்கும்.

• ஒரு கார்டுதாரரது ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு, முதன்மை கார்டுதாரராலோ அல்லது வங்கியாலோ எந்த நேரத்திலும் எந்த காரணாத்திற்காகவோ நிறுத்தப் பட்டால், முதன்மை கார்டுதாரர் வெகுமதி / கேஷ்பேக் பெறுவதிலிருந்து தகுதி நீக்கம் செய்யப் படுவார். மற்றும் திரட்டப்பட்ட அனைத்து உபயோகப்படுத்தாத வெகுமதிகள்/ கேஷ்பேக் தானாகவோ அல்ல்து விருப்பமில்லாமலோ, ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு ரத்து செய்யப் பட்டதும், பறிமுதல் செய்யப்படும்.

• விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியதற்காக வங்கியால் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு ரத்து செய்யப் பட்டிருந்தால், கார்டுதாரருக்கு NOC வழங்கப்பட முடியாது.

• குறிப்பிட்ட தேதியில், கார்டு ரத்து செய்யப் பட்டிருந்தாலோ அல்லது திரும்பப் பெறப் பட்டிருந்தாலோ அல்லது ரத்து செய்யப் பட போவதாக இருந்தாலோ அல்லது கார்டு உறுப்பினரின் கணக்கு தவறியதாக இருந்தாலோ வெகுமதி புள்ளிகளை மாற்றுவதன் மூலம் திரட்டுவதற்கோ அல்லது மீட்டெடுப்பதற்கோ அனுமதி இல்லை.

• வங்கி, எந்த நேரத்திலும், முன்னறிவிப்பின்றி அல்லது ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி, ஒரு வணிக நிறுவனத்திற்கு ஒரு கட்டணத்திற்கான அங்கீகாரத்தை மறுக்கலாம் மற்றும் /அல்லது கார்டு உறுப்பினரது கார்டை உபயோகிக்கும் திறனைக் கட்டுப் படுத்தலாம் அல்லது தள்ளிப் போடலாம் மற்றும் / அல்லது கார்டை ரத்து செய்யலாம் அல்லது இடை நிறுத்தலாம். கடனை அல்லது வணிக அபாயத்தை முறையாக நிர்வகிக்க அவ்வாறு செய்வது அவசியம் என வங்கி நியாயமாக நம்பினால், அல்லது கார்டு அல்லது கார்டு கணக்கு தவறாக பயன்படுத்தப் படுகிறது அல்லது தவறாக பயன் படுத்தப் படலாம் என்று நம்பினால், ATM, வணிக நிறுவனம் மூலமாக வங்கி கார்டை திரும்பப் பெறலாம்/ தக்க வைத்துக் கொள்ளலாம்.

• வங்கியின் தனிப்பட்ட முடிவின் படி, உங்களுக்கு எந்த வகையிலும் பொறுப்பாகாமல், வங்கி கார்டை இடை நிறுத்தலாம் / திரும்பப் பெறலாம். கார்டு மற்றும் கார்டு உறுப்பினர் ஒப்பந்தம் நிறுத்தப் பட்டால் அது தானாகவே கார்டுடன் இணைந்த சலுகைகள், ஆதாயங்கள், மற்றும் வசதிகளை முடிவுக்கு கொண்டு வரும்.

• கார்டில் பொறிக்கப் படும் எழுத்துக்களின் நீளம் அதிகபட்சம் 19 எழுத்துகளாக இருக்கலாம். பொறிக்கப்பட்ட பெயரிலுள்ள எழுத்துகள் இந்த வரம்பை தாண்டினால், கார்டு செயலாக்கப் படாது.
• வங்கி எந்த கிரெடிட் கார்டின் அம்சங்கள் மற்றும் சலுகைகளையும் 30 நாட்கள் முன்பே தகவல் தெரிவித்து விட்டு அதன் விருப்பப்படி மாற்றலாம்.
• கார்டு வழங்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் கார்டுதாரர் கார்டை செயல்படுத்த வேண்டும். இல்லையேல், அடுத்த 7 நாட்களுக்குள் கார்டு நிரந்தரமாக செயலிழக்குமாறு செய்யப்படும்.
• ஒரு கிரெடிட் கார்டு ஒரு வருடத்துக்கு மேல் உபயோகப் படுத்த படா விட்டால், கார்டுதாரருக்கு அறிவித்த பின்னர் வங்கி கார்டை நிறுத்துவதற்கான செயல்முறையைத் துவக்கும். 30 நாட்களுக்குள் கார்டுதாரரிடமிருந்து பதில் ஏதும் வரவில்லையென்றால், எல்லா நிலுவைத் தொகைகளையும் கார்டுதாரர் செலுத்துவதற்கு உட்பட்டு, கார்டு கணக்கு மூடப்படும்.
• ஒரு கார்டுதாரர் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டுக்கான வெல்கம் பெனஃபிட் (வரவேற்பு பலன்)களை ஒரு முறை தான் பெற முடியும். கார்டு ரத்தானாலோ மற்றும் தொடரும் அதே கார்டின் வேரியன்டின் மறு -திறப்புக்கு வெல்கம் பெனஃபிட் (வரவேற்பு பலன்) பொருந்தாது.
• கார்டுதாரர் வருடாந்திர கட்டணம் விதித்த பின்னர் ஏதேனும் பரிவர்த்தனைக்கு (EMI பரிவர்த்தனை உள்ளிட்டவை) கார்டை உபயோகப் படுத்தினால், வருடாந்திர கட்டணத்தை திரும்ப பெறுவதற்கான கார்டுதாரரின் கோரிக்கை அவர் கார்டை ரத்து செய்யத் தேர்வு செய்தாலும் ஒப்புக் கொள்ளப் படாது.
• பல்வேறு கிரெடிட் கார்டு விண்ணப்பங்கள் பல கடன் விசாரணைகளுக்கு வழி வகுத்து, கடன் தகுதியைப் பாதிக்கக் கூடும்.

1 அக்டோபர் 2025 முதல், வாடிக்கையாளரின் கிரெடிட் கார்டு மூடப்பட்ட 30 நாட்களுக்கு பின்னரோ அல்லது வாடிக்கையாளரின் கிரெடிட் கார்டுக்கு செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகை 90 நாட்களுக்கு மேல் நிலுவையில் இருந்தாலோ, பயன்படுத்தப் படாத **எட்ஜ் ரிவார்ட்** புள்ளிகள்/மைல்களை வங்கி பறிமுதல் செய்யும்.

**F) கிளியரிங் டர்ன் அரௌண்ட் டயம்-உடனான பணம் செலுத்தும் முறை (TAT)**

வாடிக்கையாளரால் உண்மையாக செலுத்தப்பட்ட பணம் மற்றும் வணிகரிடமிருந்து திரும்பியவை/திரும்பப் பெறப் பட்டவை ஆகியவை பேமெண்டுகளாக கருதப்படும்.

கிரெடிட் கார்டில் நிகர நிலுவைத் தொகையை விட ஏதேனும் அதிக வரவு இருந்தால் மற்றும் அது கிரெடிட் கார்டின் நிலுவைத் தேதி வரை உபயோகிக்கப் படாமலிருந்தால், அந்த தொகை வங்கியுடன்

இணைக்கப்பட்ட கணக்கிற்கு மாற்றப் படும் என்பதை நினைவில் கொள்ளவும். கிரெடிட் கார்டு கணக்கிற்கு செலுத்தப்படும் பணம் கீழ்க்காணும் வகைகளில் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம்:

1. **ரொக்கம்*:** கார்டுக்கான பேமெண்டை கார்டுதாரர் ஆக்ஸிஸ் பேங்கின் ஏதாவது ஒரு கிளையில் செலுத்தலாம். அது போன்று கிளைகளில் செலுத்தும் பணத்திற்கு ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் ரூ.175 கட்டணமாக வவலிக்கப் படும்.
   ரொக்கமாக செலுத்தப்படும் தொகைக்கு TAT – அதே நாள்.

2. **காசோலை/டிரா:ப்ட்*:** “ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு எண். XXXXXXXXXXXXXXXX"-க்கு ஆதரவாக ஒரு காசோலை அல்லது டிராஃப்ட்-ஐ வரைவி செய்து அதை ஆக்ஸிஸ் பேங்கின் கவுண்டர் மீதிருக்கும் MINC / SKYFIN சேகரிப்பு பெட்டிகளில் போடவும். வெளியூர் காசோலைகள்/டிராஃப்டுகள், அதாவது குறிப்பிட்ட நகரங்கள் தவிர மற்ற நகரங்களில் செலுத்தப் படக் கூடிய வெளியூர் காசோலைகள்/டிராஃப்டுகள் (கோரிக்கையின் பேரில், அது போன்ற குறிப்பிட்ட நகரங்களின் பட்டியல் கிடைக்கும்) ஒரு செயலாக்க கட்டணத்தை ஈர்க்கும்.
   ஆக்ஸிஸ் பேங்க் காசோலையின் க்ளியரன்ஸ்க்கான TAT – 1 வேலை நாள். வேறு பேங்க் காசோலையின் க்ளியரன்ஸ்க்கான TAT – பணமாக்கப் படுதலின் அடிப்படையில் 3-5 வேலை நாட்கள் (வெளியூர் காசோலை கிளியரன்ஸுக்கு கூடுதலாக ஒரு நாள் தேவை. கிளையில் சோதித்தறியவும்).

   *கிரெடிட் கார்டுக்கான பணம் செலுத்துவதற்குரிய தேதி 2-வது அல்லது 4-வது சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக் கிழமையில் வந்தால், காசோலைகளை/ரொக்கத்தை ஒப்புக் கொள்ள வங்கிக் கிளைகள் மூடியிருக்கும்.

3. **இணைக்கப்பட்ட ஆக்ஸிஸ் பேங்க் சேமிப்பு கணக்கு மூலமான இணைய வழியில் பணம் செலுத்துதல்:** கார்டுதாரர் ஆக்ஸிஸ் பேங்க் வலைதளம் மூலம் ஆன்லைனில் பணம் செலுத்தலாம். www.axis.bank.in-இல் உள் நுழையவும். கிளியரன்ஸுக்கான TAT – 1 வேலை நாள்.

4. **தானியங்கி -பற்று :** கார்டுதாரரின் சேமிப்பு கணக்கிலிருந்து ஒவ்வொரு மாதமும் உரிய தேதியில் பணத்தை டெபிட் செய்ய வங்கிக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல் வழங்குவதன் மூலம் நேரடியாக பணம் செலுத்தலாம். ஒரு வேளை பணம் செலுத்துவதற்கு உரிய தேதி, ஞாயிற்றுக் கிழமையில் வந்தால், அந்த கணக்கிலிருந்து பணம் அடுத்த வேலை நாளன்று கழிக்கப்படும். கிளியரன்ஸுக்கான TAT – 1 வேலை நாள்.

5. **கிளிக் செய்து செலுத்தவும் / NEFT / VMT:** உங்கள் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு நிலுவையில் உள்ள தொகையை உங்கள் மற்ற வங்கி சேமிப்பு

கணக்குகளிலிருந்து, கிளிக் செய்து செலுத்தவும் / NEFT / VMT-யை பயன்படுத்தி செலுத்துங்கள்.

கிளிக் டு பே கிளியரன்ஸுக்கான TAT – 3 வேலை நாட்கள்.
NEFT கிளியரன்ஸுக்கான TAT – 1 வேலை நாள்.
VMT கிளியரன்ஸுக்கான TAT – 2 வேலை நாட்கள்.

6. **ஏடிஎம்கள் மூலமான பேமெண்ட்:** உங்கள் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு நிலுவைத் தொகையை ஆக்ஸிஸ் பேங்க் டெபிட் கார்டு மூலமாக எந்த ஆக்ஸிஸ் பேங்க் ஏடிஎம்-மிலும் செலுத்தலாம். கிளியரன்ஸுக்கான TAT – 1 வேலை நாள்.

7. **IMPS கிரெடிட் கார்டு பேமெண்ட்:** IMPS-உடன், கார்டுதாரர்கள் எந்த ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டுக்கும் வேறு எந்த பேங்க் மொபைல் செயலியிலிருந்தும் நிகழ்-நேரத்தில் பணம் செலுத்தலாம். பல ஆக்ஸிஸ் கிரெடிட் கார்டு கணக்குகளை உங்கள் மொபைல் பயன்பாடுகளில் பணம் செலுத்துவதற்கு பதிவு செய்யலாம். மற்றும் எவரும் (கூட வேலை செய்பவர்கள் / நண்பர்கள் /கணவன்/மனைவி) எவருடைய கிரெடிட் கார்டுக்கும் இந்த வசதி மூலம் பணம் செலுத்தலாம்.

கிளியரன்ஸுக்கு TAT -அதே நாள்.'

8. **மூன்றாம் தரப்பு சேனல்கள் மூலம் பணம் செலுத்துதல்:** ஆக்ஸிஸ் பேங்க் அதன் கார்டுதாரர்களுக்கு அவர்கள் கிரெடிட் கார்டு நிலுவைத் தொகையை மேற்குறிப்பிட்டிருக்கும் முறைகள் மூலம் செலுத்த பரிந்துரைக்கிறது. ஆக்ஸிஸ் பேங்க்குடன் இணைக்கப்படாத எந்த மூன்றாம் தரப்பு செயலிகள் உள்ளிட்ட வேறு சேனல்கள் மூலம் செலுத்தப் பட்ட எந்த கிரெடிட் கார்டு பேமெண்டுகளும் கிளியரன்ஸுக்கு ஒரு அதிக TAT-ஐ கொண்டிருக்கலாம். உரிய தேதிக்குள் ஆக்ஸிஸ் பேங்கிற்கு பணம் கிடைக்கா விட்டால், கார்டு வகை மீது பொருந்தக் கூடிய அபராதக் கட்டணங்கள், பொருந்தும். இணைக்கப்படாத சேனல்கள் மூலம் செய்யப்படும் தாமதமான / பிரதிபலிக்கப்படாத கார்டு மீதான பேமெண்ட் களிலிருந்து எழும் ஏதாவது கேள்விகளுக்கு வாடிக்கையாளர் அந்தந்த சேனல்களை நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.

9. **குடியுரிமை பெறாத கார்டுதாரர்களுக்கு பணம் செலுத்துதல்:** குடியுரிமை பெறாத கார்டுதாரர்களுக்கு வங்கி சர்வதேச கிரெடிட் கார்டு வசதியை வழங்குகிறது மற்றும் அது போன்ற கிரெடிட் கார்டுகளின் மீது ஆக்ஸிஸ் பேங்க் NRE கணக்கை பயன்படுத்தி பணம் செலுத்துதலை கட்டாயமாக்குகிறது. அது போன்ற குடியுரிமை இல்லாத கார்டுதாரர்களுக்கு அது போன்ற ஆக்ஸிஸ் பேங்க் NRE கணக்கிலிருந்து தானியங்கி பற்று கட்டாயமாகும். ஆக்ஸிஸ் பேங்க் NRO கணக்கிலிருந்து பணம் செலுத்த வேண்டியிருக்கும் பட்சத்தில், ஃபார்ம் 15 CA/CB

உள்ளிட்ட சில குறிப்பிட்ட ஆவணங்கள் மற்றும் ஒரு NRO கணக்கு காசோலை, ஒவ்வொரு முறை நீங்கள் NRO கணக்கிலிருந்து பணம் செலுத்த எண்ணும் போதும் தேவைப்படும். NRE அல்லாத ஒரு மூலத்திலிருந்து, தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்காமல் செலுத்தப்பட்ட ஒரு பேமெண்டுக்கு, வங்கியால் ஒரு NRE அல்லாத மூலத்தை உறுதிப்படுத்த முடிந்தால் அல்லது அது ஒரு NRE அல்லாத மூலத்திலிருந்து வந்தது என வங்கி நம்புவதற்கு ஒரு காரணம் இருந்தால், அத்தகைய ஆவணங்களை வங்கிக்கு சமர்ப்பிக்கும் வரை, வங்கி அந்த கார்டின் மீது சர்வதேச பயன்பாட்டை முடக்க உரிமை பெற்றிருக்கிறது. அந்த ஆவணங்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் சமர்ப்பிக்க படா விட்டால், வங்கி வாடிக்கையாளரை 'Master Direction- Compounding of Contraventions under FEMA, 1999' (FED Master Direction No.4/2015-16 dated January 01, 2016 and updated as on January 04, 2021)-ன் கீழ் கூட்டு சேர்க்கைக்கு தாக்கல் செய்ய கட்டாயப் படுத்தலாம். கூட்டு சேர்க்கை பற்றி மேலும் அறிய கீழிருக்கும் லிங்க்கை காணலாம். https://m.rbi.org.in/SCRIPTs/FAQView.aspx?Id=80

10. கார்டு கணக்கில் வாடிக்கையாளரால் செய்யப்பட்ட பேமெண்டுகள்/ வணிகரால் திரும்ப செலுத்தப்பட்ட பணம் போன்ற கார்டு கணக்கில் வரவு வைக்கப்பட்ட பணத்தை தவிர வேறு வரவுகள் குறைந்தபட்ச நிலுவைத் தொகையை சரி செய்ய கருதப் படாது. எனவே, வாடிக்கையாளர்கள் குறைந்தபட்ச நிலுவைத் தொகையை விட அதிகமாக அல்லது சமமான தொகையை செலுத்தும் போது அந்த வரவுகளை குறைத்து செலுத்த வேண்டாமென்று வேண்டப் படுகிறார்கள். அது போன்ற வரவுகள் கேஷ்பேக், சேவை மாற்றுதல் உள்ளிட்டவையாகும்.

    அது போன்ற வரவுகள் தொடரும் மாதங்களுக்கான நிலுவைத் தொகைகளை கணக்கிடும் போது கருத்தில் கொள்ளப் படும் என நீங்கள் நம்பலாம். இது போன்ற தருணங்களில், குறைந்தபட்ச நிலுவைத் தொகையை செலுத்த தவறினால், ஃபீஸ் மற்றும் கட்டணங்கள் விதிக்கப் படலாம்.

11. **NACH ஆணை மூலம் பணம் செலுத்துதல்:** பணம் செலுத்துவதற்கு உரிய தேதிக்கு 1 நாள் முன்னரே NACH ஆணை செயல்படுத்தப்படும்.

**G) கார்டு உறுப்பினர் பதவியை நிறுத்துதல்/ஒப்புவித்தல்/ரத்து செய்தல்**

கார்டுதாரர் எந்த நேரத்திலும் கார்டு கணக்கை முன்னறிவிப்புடனோ/ முன்னறிவிப்பின்றியோ ஒப்புவிக்க/நிறுத்த தேர்ந்தெடுக்கலாம். தவறாகப் பயன்படுத்தப் படுவதை தவிர்க்க, கிரெடிட் கார்டை நான்கு துண்டுகளாக வெட்டி ஹோலோகிராம் மற்றும் காந்தப் பட்டை நிரந்தரமாக அழிக்கப்

படுவதை உறுதி செய்து கொள்ளும் படி அறிவுறுத்தப் படுகிறது. கார்டுதாரர் உறுப்பினர் நிலையை எந்த நேரத்திலும் வாடிக்கையாளர் சேவை மின்னஞ்சல் முகவரிக்கு முழு கார்டு எண்ணை குறிப்பிட்டு எழுதுவதன் மூலமோ அல்லது வாடிக்கையாளர் சேவையை அழைத்தோ முடித்துக் கொள்ளலாம் ("தொடர்பு வழிகள்" பகுதியைப் பார்க்கவும்). குறிப்பிட்ட கார்டு கணக்கின் நிலுவையில் உள்ள அனைத்துத் தொகைகளும் ஆக்ஸிஸ் பேங்குக்கு கிடைத்த பின்னர் மட்டுமே கார்டு முடிவு செயலுக்கு வரும். ஒரு கிரெடிட் கார்டு திட்டம் முடிவுக்கு வரும் போது அல்லது ஒரு கிரெடிட் கார்டை புதுப்பிக்கும் போது, ஆக்ஸிஸ் பேங்க் தன் தனிப்பட்ட முடிவின் படி வாடிக்கையாளரிடம் தற்போதுள்ள கார்டு வகை அல்லாது வேறு ஒரு வகை கார்டை வழங்கும் உரிமையை பெற்றிருக்கிறது. எந்த கிரெடிட் கார்டின் மீதான கடன் வரம்பு மற்றும் பண வரம்பும் எந்த நேரத்திலும் ஆக்ஸிஸ் பேங்கின் தனிப்பட்ட முடிவின் படி இருக்கும். கார்டுக்கான விண்ணப்பம் கார்டு முடிவு/புதுப்பிப்பு எதுவானாலும் அப்போது வழங்கப்படும் எந்த மாற்றுக் கார்டுக்கும் செல்லுபடியாகிம்.

கார்டு கணக்கை முடித்த பின்னரும், கார்டு மீதான நிலுவைத் தொகை முழுதாக செலுத்தப்படும் வரை நிதிக் கட்டணங்கள் தொடர்ந்து பொருந்தும்.

வாடிக்கையாளர் தங்கள் கிரெடிட் கார்டை ரத்து செய்வதற்காக வங்கியை தொடர்பு கொள்ளும் போது இணைப்பு துண்டிக்கப்பட்டால் அல்லது தொடர்ந்து தொடர்பு கொள்ள முடியாமற் போனால், கிரெடிட் கார்டு தற்காலிகமாக தடுக்கப்படும்.

மேலும், அடுத்த 4 வேலை நாட்களுக்குள், வங்கி வாடிக்கையாளரை தொடர்பு கொள்ள முயற்சிக்கும். ஒரு வேளை வாடிக்கையாளரை இன்னும் தோடர்பு கொள்ள முடியவில்லையெனில் அல்லது வாடிக்கையாளரால் வங்கியைத் தொடர்பு கொள்ள முடியவில்லையென்றால், அவர்களது கிரெடிட் கார்டு ரத்து செய்யப் படுவதற்கான செயலாக்கம் துவங்கும். நிலுவையில் உள்ள தொகைகள் ஏதேனும் இருப்பின், அடுத்த அறிக்கை சுழற்சியில் பிரதிபலிக்கப்படும். நிலுவைத் தொகைகள் செலுத்தப்பட்டால், கார்டு நிரந்தரமாக ரத்து செய்யப் படும்.

ஒரு கிரெடிட் கார்டை ஒரு வருடத்திற்கு மேலாக பயன் படுத்தவில்லையென்றால், வங்கி அதனை மூடுவதற்கான செயல்முறையையும் துவக்கும். அது போன்ற நேரங்களில், வங்கி வாடிக்கையாளருக்கு தகவல் அளிக்கும் மற்றும், அதில் கொடுக்கப் பட்ட நேரத்திற்குள் எந்த பதிலும் அளிக்கப் படவில்லையென்றால், நிலுவையில் உள்ள தொகைகள் (கூடுதல் கார்டுகள் ஏதேனும் இருப்பின், அவை உள்ளிட்டவை) செலுத்தப் படுவதற்கு உட்பட்டு, வங்கி கார்டு கணக்கை மூடி விடும்.

ஒரு கார்டுதாரர் எதிர்மறை எட்ஜ் ரிவார்ட் புள்ளிகள்/மைல்கள் இருப்பு வைத்திருந்தால், அவற்றுக்கு சமமான மதிப்பு வங்கியின் முடிவுப் படி அறிக்கையில் பற்று வைக்கப்படலாம் மற்றும் வேறு ஏதேனும் நிலுவைகளுடன் சேர்த்து கார்டுதாரரால் செலுத்தப்பட வேண்டும்.

கணக்கில் நிலுவையில் உள்ள அனைத்து தொகைகளையும் செலுத்திய பின்னரே கார்டு ரத்து செய்யப்படும். எந்த வருடாந்திர, சேரும் அல்லது புதுப்பிக்கும் கட்டணங்களும் விகிதாசார அடிப்படையில் திரும்பத் தரப்படாது.

உதாரணம் – 1000 எதிர்மறை ரிவார்ட் புள்ளிகளின் இருப்பு, அறிக்கையில் ரூ.200- பற்றாக மாற்றப்படும். அதாவது 1000 எதிர்மறை புள்ளிகள் X ரூ.0.20 ஒரு ரிவார்ட் புள்ளி. அது போலவே எதிர்மறை மைல்கள் இருப்பு -1000 எட்ஜ் மைல்கள் ரூ.1000 என மாற்றப்பட்டு அறிக்கையில் பற்று வைக்கப்படும். (இந்த மாற்ற மதிப்பு வெவ்வேறு கார்டு வகைகளுக்கு ஏற்ப மாறுபடலாம்.) இந்த தொகை கார்டுதாரரின் கணக்கில் சேர்க்கப்பட்டு நிலுவையில் இருக்கும் வேறு தொகைகளுடன் வவலிக்கப்படும். ஏதேனும் காரணத்திற்காக பிரைமரி கார்டு நிறுத்தப்பட்டால், கூடுதல் கார்ட் வசதியும் நிறுத்தப்படும்.

வாடிக்கையாளரால் கோரப் படவில்லையென்றால், ஏற்கனவே வைத்திருக்கும் கார்டை மாற்றுதல்/ புதுப்பித்தல் தவிர வேறு சூழநிலைகளில் வங்கி தானாகவே வாடிக்கையாளருக்கு ஒரு கார்டை அனுப்பாது. வாடிக்கையாளரின் கோரிக்கையின் பேரில் ஒரு கார்டு தடுக்கப் பட்டிருந்தால், வாடிக்கையாளரின் வெளிப்படையான ஒப்புதலுடன் மட்டுமே தடுக்கப்பட்ட கார்டுக்கு பதிலாக மாற்று கார்டு வழங்கப்படும். மேலும், வாடிக்கையாளர், கார்டைப் புதுப்பிக்க விரும்பவில்லையெனில் அவள்/அவருக்கு, வங்கியை தொடர்பு கொண்டு தனது கார்டை ரத்து செய்ய உரிமை உண்டு.

கார்டு ரத்தானால், கார்டுதாரர் பெற்ற EMI/ILCCகளையும் முன்கூட்டியே முடிக்க வேண்டியிருக்கும் மற்றும் பொருந்தக் கூடிய முன் கூட்டியே செலுத்துவதற்கான கட்டணங்கள் மற்றும் ஜிஎஸ்டி விதிக்கப் படும்.

கிரெடிட் கார்டு புதுப்பிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, https://www.axisbank.in/ncmitc -என்ற வலைதளத்தின் உள் நுழையவும்.

கார்டு ரத்தானால், கார்டுதாரர் பெற்ற EMI/உடனடி கடன்களையும் முன் கூட்டியே செலுத்த வேண்டியிருக்கும் மற்றும் முன் கூட்டியே செலுத்துவதற்கான கட்டணங்கள் மற்றும் ஜிஎஸ்டி விதிக்கப் படும்.

**H) கார்டுகளின் இழப்பு / திருட்டு / தவறான உபயோகம்**

கார்டு தொலைந்து போனாலோ, திருடப் பட்டாலோ, உங்கள் PIN அல்லது வேறு பாதுகாப்பு தகவல் வேறு யாருக்காவது தெரிந்தாலோ அல்லது உங்கள் அனுமதியின்றி உபயோகப்படுத்தப் பட்டாலோ, உடனடியாக வங்கிக்கு தொலைபேசியில் தெரிவிக்க வேண்டும். (''தொடர்பு வழிகள்'' பகுதியைப் பார்க்கவும்).

கீழிருக்கும் எண்களில் தொலைந்த கார்டுக்கான தேர்வு, தேர்வு-0 என வழங்கப் பட்டிருக்கிறது: 1800 209 5577 (கட்டணமில்லா எண்) மற்றும் 1800 103 5577 (கட்டணமில்லா எண்). உள்நாட்டு வாடிக்கையாளர்கள் இந்தியாவுக்கு வெளியில் இருந்து வங்கியை 022 6798 7700 என்ற எண்ணில் அழைக்கலாம்.

ஒரு காவல் புகார்/முதல் தகவல் அறிக்கை (FIR) உடனடியாக அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு சென்று பதிவு செய்யப் பட்டு வங்கிக்கு அதன் நகல் சமர்ப்பிக்க பட வேண்டும். ஒரு வேளை தவறாகப் பயன் படுத்தப் பட்டால், பாலிஸியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நிறைவேற்றுதற்கு உட்பட்டு, வங்கியின் பொறுப்பு தொலைந்த கார்டின் கீழ் உள்ள தொகைக்கு வரம்பிடப்படும். ஏடிஎம் கார்டுகள் அல்லது பின்/கடவுச்சொல்/OTP/mPIN/CVV அடிப்படையிலான பரிவத்தனைகளுக்கு கார்டுகள் தவறாகப் பயன்படுத்தப் பட்டால், கார்டுதாரர் மட்டுமே பொறுப்பாவார்.

## I) PIN-ஐ பாதுகாப்பாக வைத்திருப்பது தொடர்பான தகவல் வழங்குதல்

கார்டுடன் உபயோகிப்பதற்காக கார்டுதாரருக்கு வழங்கப்பட்ட பெர்சனல் ஐடென்டிஃபிகேஷன் நம்பர் (PIN) (தனிப்பட்ட அடையாள எண்) அல்லது அதற்காக கார்டுதாரரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏதோவொரு எண் கார்டுதாரருக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டும். அது கார்டுதாரரின் தனிப்பட்ட உபயோகத்திற்கு, மற்றும் மாற்ற முடியாதது மற்றும் கண்டிப்பாக ரகசியமானது. ஒரு மூன்றாம் தரப்பினர் உபயோகிக்கும் வகையில், இந்த PIN எந்த வகையிலும், எந்த விதத்திலும், எந்த இடத்திலும் எழுத்து வடிவத்தில் வைக்கப் படக் கூடாது. இந்த PIN எந்த சூழ்நிலையிலும் தரப்பினருக்கும், வங்கியின் ஊழியர்களுக்கோ, அல்லது வணிக நிறுவனங்களுக்கோ எந்த வகையிலும் எந்த வழ் நிலையிலும் தானாகவோ அல்லது வேறு விதமாகவோ தெரியப் படுத்தப் படக் கூடாது. வங்கி கார்டுதாரரின் PINஐ கார்டுதாரர் தவிர வேறு எவருக்கும் வழங்கும் போது கவனமாக இருக்க வேண்டும்.

## கார்டுதாரர்களுக்கு காப்பீட்டு திட்டம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டு தொகைகள் கார்டு வகையைப் பொறுத்து பொருந்தும். பொருந்தக் கூடிய காப்பீட்டு தொகைகளுக்கு வெல்கம் (வரவேற்பு) கையேட்டை பார்க்கவும்.

**விமான விபத்து காப்பீடு:** விபத்துக்கு குறைந்தபட்சம் 90 நாட்களுக்கு முன்பு ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு ஒரு வணிக நிறுவனத்தில் உபயோகப் படுத்தப் பட்டிருக்க வேண்டும் அல்லது அதை உபயோகித்து ஒரு

ஏடிஎம்மில் பணம் எடுக்கப் பட்டிருக்க வேண்டும் மற்றும் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டை உபயோகித்து விமான டிக்கட் வாங்கியிருந்தால் மட்டுமே விமான விபத்திற்கு செல்லுபடியாகும். ஆக்ஸிஸ் பேங்கின் எல்லா நிலுவைத் தொகைகளும் செலுத்தப் பட்டிருந்தாலொழிய கார்டுதாரரின் நாமினி விமான விபத்து காப்பீட்டு பாலிஸியின் கீழ் எந்த தொகையும் பெற உரிமை பெற மாட்டார். நிலுவைத் தொகையைப் பெற ஆக்ஸிஸ் பேங்க் காப்பீட்டுத் தொகை மீது முதல் கட்டணம் /உரிமை பெறும்.

**குறிப்பு: 31 அக்டோபர் 2022-லிருந்து விமான விபத்து காப்பீடு நிறுத்தப் பட்டது.**

**ஜீரோ லாஸ்ட் கார்டு லயபிலிட்டி:** மோசடி கொள்முதல் பரிவர்த்தனைகளுக்கு எதிராக, கார்டு தொலைந்தது குறித்து ஆக்ஸிஸ் பேங்கிற்கு கார்டுதாரர் புகார் அளித்த நிமிடத்திலிருந்து 30 நாட்கள் முன்பிலிருந்து பாதுகாப்பு வழங்குகிறது. இந்த காப்பீடு மோசடி பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும் மற்றும் இது கட்டாயமாக ஒரு FIRஆல் ஆதரிக்கப் பட வேண்டும். இந்த காப்பீடு ஏடிஎம் மற்றும் PIN/Password/OTP/mP-IN/CVV அடிப்படையிலான பரிவர்த்தனைகளுக்கு செல்லுபடியாகாது.

**கொள்முதல் பாதுகாப்பு :** கிரெடிட் கார்டை உபயோகித்து கொள்முதல் செய்த 90 நாட்களுக்குள் தீ மற்றும் திருட்டுக்கு எதிரான பாதுகாப்பு கட்டாயமாக ஒரு FIRஆல் ஆதரிக்கப் பட வேண்டும். வாடிக்கையாளரின் மொத்த அலட்சியத்தால் ஏற்பட்ட இழப்புக்கு காப்பீடு கிடையாது. நகைகள் மற்றும் அழுகக்கூடிய பொருட்களுக்கும் காப்பீடு செய்ய முடியாது.

**விலைப் பாதுகாப்பு:** இந்த காப்பீடு ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டால் ஒரு பொருளுக்கு செலுத்தப் பட்ட விலைக்கும் அதே பொருளுக்கு (அதே பிராண்ட், மாடல் பெயர் மற்றும்/அல்லது எண்) விளம்பரம் செய்யப் பட்ட ஒரு குறைந்த விலைக்கும் இடையிலான வித்தியாச தொகையை வழங்கும். இந்த காப்பீடு ரூ.2,500-க்கு மேலான அசல் கொள்முதல் விலை கொண்ட ஒரு பொருளுக்கு ஆன்லைனில் அமேஸான், ஃப்ளிப்கார்ட் அல்லது வேறு பிரபலமான கொள்முதல் தளத்திற்கு மட்டுமே பொருந்தும். குறைந்த விலை அதே மின்-வணிக நிறுவனத்தில் இருக்க வேண்டும், அச்சடிக்கப்பட்ட விளம்பரம், கொள்முதல் செய்த மூன்று நாட்களுக்குள் இருக்க வேண்டும் மற்றும் கிளெய்ம் இன்டிமேஷன் (உரிமை கோரல் அறிவிப்பு) அச்சடிக்கப்பட்ட விளம்பர தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் இருக்க வேண்டும். (இந்த அம்சத்தின் கீழ் உள்ள பொருட்களுக்கு வங்கியைத் தொடர்பு கொள்ளவும்.)

**கடன் பாதுகாப்பு :** விபத்தினால் மரணம் ஏற்பட்டால், கார்டின் மீதான நிலுவைத் தொகையில் ஒரு குறிப்பிட்ட தொகை வரை காப்பீடு அளிக்கப்படும்.

**செக்-இன் பேகேஜ் (சாமான்) -இல் தாமதம்:** வெளி நாடுகளுக்கு பயணிக்கும்

போது, 6 மணி நேரத்திற்கு மேலாக பேகேஜ் (சாமான்) தாமதமாக வந்தால், அடிப்படைத் தேவைகளுக்கான பொருட்களுக்கான விலையைத் திரும்ப தருகிறது. இது ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டை உபயோகித்து வாங்கிய விமான டிக்கெட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். செக் இன் செய்யப் பட்ட பேகேஜ் (சாமான்) என்பது காப்பீடு செய்து கொண்டவரால், தான் பயணிக்கும் அதே போக்குவரத்து முறையில் போக்குவரத்துக்காக ஒப்படைக்கப்பட்டு ஒரு சர்வதேச விமான நிறுவனம்/ இந்தியாவிற்கு வெளியிலிருக்கும் கேரியரால், ஒப்புக் கொள்ளப்பட்டு ரசீதும் வழங்கப் பட்ட பேகேஜ்(சாமான்).

**செக்-இன் பேகேஜ் இழப்பு:** வெளி நாட்டு பயணத்தின் போது பேகேஜ் (சாமான்) இழப்பு அல்லது சேதத்திற்கு காப்பீடு அளிக்கிறது. இது ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டை உபயோகித்து வாங்கிய விமான டிக்கெட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். செக் இன் செய்யப் பட்ட பேகேஜ் (சாமான்) என்பது காப்பீடு செய்து கொண்டவரால், தான் பயணிக்கும் அதே போக்குவரத்து முறையில் போக்குவரத்துக்காக ஒப்படைக்கப்பட்டு ஒரு சர்வதேச விமான நிறுவனம்/ இந்தியாவிற்கு வெளியிலிருக்கும் கேரியரால், ஒப்புக் கொள்ளப்பட்டு ரசீதும் வழங்கப் பட்ட பேகேஜ்(சாமான்).

**பயண ஆவணங்களின் இழப்பு :** வெளி நாட்டுக்கு பயணிக்கும் போது, தொலைந்த பாஸ்போர்ட் / இதர பயண ஆவணங்களுக்கான விண்ணப்ப செலவு உள்பட, பாஸ்போர்ட் பெறுவதற்கான செலவை அளிக்கும். இது ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டை உபயோகித்து வாங்கிய விமான டிக்கெட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

**K) தவறுதல்**

1) ஒரு தவறுதல் ஏற்பட்டால், அதாவது குறைந்தபாட்ச நிலுவைத் தொகை உரிய தேதியில் செலுத்தப் படா விட்டால் அல்லது கார்டு உறுப்பினர் ஒப்பந்தத்தின் ஏதாவது ஒரு பிரிவை மீறினால், கார்டுதாரருக்கு அஞ்சல், ஃபேக்ஸ், தொலைபேசி, மின்னஞ்சல், எஸ்எம்எஸ் செய்திகள் மற்றும் / அல்லது நிலுவைத் தொகைகளை சேகரிக்க நியமிக்கப் பட்ட மூன்றாம் தரப்பினர் மூலம் நினைவூட்டல்கள் அனுப்பப்படும். அது போன்று நியமிக்கப் பட்ட மூன்றாம் தரப்பினர் இந்திய வங்கிகள் சங்கத்தின் (IBA) கடன் வவல் நெறிமுறைகளை கடை பிடிக்க வேண்டும்.

2) வாடிக்கையாளர்களுக்கு, பணம் செலுத்த வேண்டிய தேதியிலிருந்து 3 நாட்கள் சலுகை காலம் வழங்கப் படும், இந்த நேரத்தில் பணம் செலுத்துவது உரிய தேதியை மீறியதாகாது. இந்த வசதி செலுத்தப் படும் பணத்துக்கான செயலாக்க நேரத்தை மனதில் கொண்டு வழங்கப் பட்டிருக்கிறது ஆனால் வாடிக்கையாளர் தமது நிலுவைத் தொகையை கார்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தேதியில் செலுத்த வேண்டும்.

3) மூன்று அல்லது அதிக மாதங்களுக்கு தொடர்ந்து ஒரு வாடிக்கையாளர் தவணை செலுத்த தவறினாலும், அல்லது தீர்வு நேரங்களிலும் நிலுவையில் இருக்கும் மொத்தத் தொகையும் செலுத்தப்படும் வரையில் பில் செய்யப்பட்ட அறிக்கையுடன் கூடுதலாக நிதிக் கட்டணங்கள் மற்றும் பொருந்தக் கூடிய வரிகள் விதிக்கப்படும். சரியான நிலுவைத் தொகை விவரங்களுக்கு, வங்கியில் உறுதி செய்து கொள்ளவும்.

4) ஒரு கிரெடிட் கார்டு கணக்கு 3 நாட்களுக்கு 'பாஸ்ட் ட்யூ' (செலுத்த வேண்டிய நாட்கள் கடந்து)-வாக இருந்தால், அந்த கிரெடிட் கார்டு கணக்கை 'பாஸ்ட் ட்யூ' (செலுத்த வேண்டிய நாட்கள் கடந்து) என வங்கி கிரெடிட் இன்ஃபர்மேஷன் கம்பெனிகளுக்கு(CICs) தெரிவிக்க வேண்டும். எனினும், 'செலுத்த வேண்டிய நாளைக் கடந்த நாட்களின் எண்ணிக்கை' மற்றும் தாமதமாக செலுத்துவதற்கான கட்டணங்கள், கிரெடிட் கார்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பணம் செலுத்த வேண்டிய தேதியிலிருந்து கணக்கிடப்படும்.

5) கார்டுதாரர், ஒரு முறை பணம் செலுத்த தவறினால், வங்கி அதன் தனிப்பட்ட முடிவின் படி, கீழ் வருவனவற்றிற்கு உரிமை பெற்றிருக்கும்:

a. கார்டுதாரருக்கு வழங்கப்பட்டிருக்கும் அனைத்து கிரெடிட் கார்டு வசதிகளையும் திரும்ப பெறலாம்.
b. கார்டுதாரரை உடனடியாக அவரது கார்டில் நிலுவையில் உள்ள அனைத்து இருப்பையும் உடனடியாக செலுத்த சொல்லலாம்.c. வங்கியில் கார்டுதாரரின் பெயரில் உள்ள அனைத்து பணங்கள்/வைப்புத் தொகைகள்/கணக்குகளிலிருக்கும் தொகையை வங்கியின் உரிமையைப் பயன்படுத்தி நிலுவையில் உள்ள தொகைக்கு ஈடு செய்யலாம்.

6) தவணை தவறிய நிலையில், வங்கி தவணை தவறிய அறிக்கையை கிரெடிட் இன்ஃபர்மேஷன் பீரோக்களுக்கு அல்லது அது போன்ற சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிற நிறுவனங்களுக்கு, அனுப்பலாம். பணம் செலுத்துவதற்கு உரிய தேதியிலிருந்து பில்லிங் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள பில்லிங் தேதிக்கு இடையேயான காலத்தை கார்டுதாரரை தவணை தவறியவராக புகாரளிப்பதற்கான அறிவிப்பு காலமாக கருதப்படுகிறது.

7) தவணை தவறிய அறிக்கையை திரும்ப பெறுவதற்கான வழிமுறை மற்றும் நிலுவைத் தொகையை செலுத்திய பிறகு தவணை தவறிய அறிக்கையை திரும்ப பெறுவதற்கான காலம்:

*வங்கி CIBIL-க்கு – கிரெடிட் இன்ஃபர்மேஷன் பீரோ (இந்தியா) லிமிடெட் -டுக்கு பரிந்துரைக்கப் பட்ட வடிவத்தில் மாதமிரு முறை (அறிக்கை சுழற்சி தேதி அறிவிப்பு மற்றும் மாத இறுதி அறிவிப்பு) கார்டுதாரரின் தரவை சமர்ப்பிக்கும். இந்த தரவு எல்லா கார்டுதாரர்களது, முந்தைய மாதத்தின் தவணை தவறியவர்கள் மற்றும் தற்போதைய கார்டுதாரர்களது தவணையை திரும்ப செலுத்தும் நிலையை உள்ளடக்கியது. சமர்ப்பிக்கப்பட்ட தரவை CIBIL அடுத்த 30 நாட்களுக்குள் தங்கள் சர்வரில் பதிவேற்றுகிறது.

ஒரு வாடிக்கையாளர் சமரசத் தீர்வைத் தேர்ந்தெடுத்தாலோ அல்லது கணக்கு தள்ளுபடி செய்யப் பட்டாலோ, CICகள் முறையே தீர்வு செய்யப் பட்டவை மற்றும் தள்ளுபடி செய்யப்பட்டவை என புதுப்பிக்கப்படும்.

8) கார்டுதாரரின் இறப்பு / நிரந்தர இயலாமை ஏ: முழுதான நிலுவைத் தொகை (பில் செய்யப்படாத பரிவர்த்தனைகள் உள்ளிட்டவை) ஆக்ஸிஸ் பேங்கிற்கு உடனடியாக செலுத்த வேண்டியதாகி, செலுத்தப் படும். கார்டுதாரரின் சொத்தில் இருந்து முழு நிலுவைத் தொகையையும் வசூலிக்க ஆக்ஸிஸ் பேங்கிற்கு உரிமை உண்டு. கார்டுதாரரின் பெயரில் வங்கியில் பராமரிக்கப்படும் பணம்/ வைப்புத் தொகை/ கணக்குகளில் இருந்து மொத்த நிலுவைத் தொகையையும் திரும்பப் பெற வங்கிக்கு உரிமை உண்டு.

9) ஒரு கிரெடிட் கார்டு முடிக்கப் பட்டால், கார்டில் கிரெடிட் இருப்பு இருந்தால், கார்டு CICகளில் 'மூடப் பட்டது' என புதுப்பிக்கப் படாது. கார்டில் நிலுவையில் எந்த இருப்பும் இல்லாத கிரெடிட் கார்டுகள் மட்டுமே CIC களுக்கு 'மூடப்பட்டது'என அறிவிக்கப்படும்.

**L) வெளிப்பாடு**

ஆக்ஸிஸ் பேங்க் RBI-யால் அங்கீகரிக்கப் பட்ட கிரெடிட் பீரோக்களுடன் கூட்டு சேரலாம் மற்றும் உங்கள் தற்போதைய இருப்பு, பணம் செலுத்தும் வரலாறு மற்றும் அவசியமான விவரங்கள் உள்ளிட்ட ஆனால் அவை மட்டுமே அல்லாத கடன் விவரங்களை பகிர்ந்து கொள்ளும். இந்த கிரெடிட் பீரோக்கள் கடன் வழங்கலாமா கூடாதா என்பது குறித்த எந்த கருத்தையோ, குறிப்பையோ அல்லது விளக்கத்தையோ அளிப்பதில்லை. உரிய நிலுவைத் தொகைகளை உரிய நேரத்தில் செலுத்துவதன் மூலம் ஒரு நல்ல கடன் வரலாற்றை பராமரிப்பது உங்கள் நலனுக்காகவே. கிரெடிட் பீரோக்கள் நடைமுறையில் இருப்பதால், பொறுப்பான வாடிக்கையாளர்கள் கடன் வழங்குகிறவர்களிடமிருந்து விரைவான மற்றும் அதிக போட்டியுடனான செவைகளை மேலும் சிறந்த விதிமுறைகளின் கீழ் எதிர்பார்க்கலாம். கிரெடிட் பீரோக்களிடம் வாடிக்கையாளர்களின் தவணை தவறல் விவரங்கள் இருப்பதனால், அது உங்கள் எதிர்காலத் தேவைகளுக்கான கடன் தகுதியைப் பாதிக்கலாம். ஆக்ஸிஸ் பேங்க் வாடிக்கையாளர் விவரங்களை மாதாந்திர அடிப்படையில் அல்லது வங்கி மற்றும் கிரெடிட் பீரோக்களுக்கு இடையே ஒப்புக் கொண்ட படி அது போன்ற வேறு ஒரு கால அளவில் தெரிவிக்கலாம். பில்லில் ஏதாவது தகராறு இருந்து வங்கிக்கு தெரிவிக்கப் பட்டால், அத்தகைய தகவல், குறிப்பாக ஒரு தவறிய தவணை குறித்த தகவல், அந்த தகராறு தீர்க்கப்பட்ட பின்னரே வெளியிடப்படும். தகராறு தீர்க்கப்படும் வரை வாடிக்கையாளர்கள் பில்லிங் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச செலுத்த வேண்டிய தொகையை (MAD) மட்டுமாவது செலுத்த வேண்டும். உரிய தேதியில் குறைந்தபட்ச தொகை (MAD) செலுத்தப்படா விட்டால், அந்த கணக்கு நிலுவையில் உள்ளதாக கருதப்பட்டு கடன் தகவல் மையங்களுக்கு (CICs)

தெரிவிக்கப்படும். கார்டுதாரர் தன்னைப் பற்றிய/கூடுதல் கார்டுதாரர்கள் பற்றிய, கடனை செலுத்துவதில் ஏதேனும் தவறு ஏற்பட்டிருந்தால் அவை உள்ளிட்ட பொருத்தமான மற்றும் தேவையான தகவல்கள் என வங்கியால் கருதப்படும் தகவல்களை, வங்கியால் தீர்மானிக்கப்பட்ட தற்போதைய அல்லது கூடுதல் கடன் மையங்களுடன் அவ்வப்போது பகிர்ந்து கொள்ள ஆக்ஸிஸ் வங்கிக்கு உரிமை உள்ளது என ஒப்புக்கொள்கிறார். அதன்படியே கூடுதல் கார்டுதாரர்களிடமிருந்தும் இது போன்ற கடன் மையங்களுடன் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள சம்மதம் பெறப் படுகிறது. மேலும் அத்தகைய நிறுவனங்கள் செயலாக்கப்பட்ட தகவல்கள் அல்லது தரவு அல்லது பொருட்கள் போன்றவற்றை வங்கிகளுக்கும் / நிதி நிறுவனங்களுக்கும் மற்றும் பிற கடன் வழங்குபவர்களுக்கும் கிடைக்க செய்யலாம். கடன் பணியகங்களில், கடன் குறிப்பு வழங்கும் நிறுவனங்கள், கடன் தகவல் நிறுவனங்கள் அல்லது கடன் வாங்குபவர்களைப் பற்றிய தகவல்களை சேகரிக்க, தொகுக்க மற்றும் பரப்ப ரிசர்வ் வங்கியால் உருவாக்கப்பட்டு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் உள்ளிட்டவை அடங்கும்.
கார்டுதாரர் எந்த நேரடி விற்பனை அல்லது தொலைபேசி அழைப்பு/ தொலைபேசி விற்பனை அழைப்புகளையும் ஆக்ஸிஸ் பேங்க்/அதன் கூட்டாளிகள்/துணை நிறுவனங்கள்/முகவர்கள்-இடமிருந்து பெற விரும்பவில்லையெனில், ‘TRAI’வலைதளத்தில் வழங்கப்பட்டு:ள்ள ‘ப்ரொவைடர் கஸ்டமர் பிரிஃபரன்ஸ் ரெஜிஸ்டர்’ (வழங்குனர் வாடிக்கையாளர் முன்னுரிமை பதிவேடு)-இல் பதிவு செய்வதன் மூலம் கார்டுதாரர் விலகிக் கொள்ளலாம்.

ஆக்ஸிஸ் பேங்க் மற்ற வணிகர்/கார்ப்பரேட்களுடன் இணைந்து இணை-பிராண்ட் கிரெடிட் கார்டுகளை கூட்டாக வழங்குகிறது. இந்த ஏற்பாட்டின் கீழ் வங்கி வருவாய்/கட்டணங்களை கூட்டாளி வ்ணிகர்/கார்ப்பரேட்டுடன் பகிர்ந்து கொள்ளலாம். வாடிக்கையாளர்கள் தாங்கள் வங்கியுடன் பகிர்ந்து கொண்ட தகவல்களை மைல்ஸ் அண்ட் மோர், விஸ்தாரா ஏர்லைன்ஸ், சாம்சங், சேர்க்கை, கார்டு அம்சம் முழுமையடைதல், விற்பனை, விளம்பர நடவடிக்கைகள் மற்றும் பயன்களின் மீட்பு போன்றவற்றிற்காக இணை பிராண்ட் கூட்டாளியாக செயல்படும் ஸ்பைஸ்ஜெட் ஆகியவற்றுடன் பகிர்ந்து கொள்ளவும் வெளியிடவும் வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார்கள். இது ஆக்ஸிஸ் பேங்க் மைல்ஸ் அண்ட் மோர் வேர்ல்ட் செலக்ட் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் மைல்ஸ் அண்ட் மோர் வேர்ல்ட் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் விஸ்தாரா இன்ஃபினிட் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் விஸ்தாரா சிக்னேச்சர் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் விஸ்தாரா பிளாட்டினம் கிரெடிட் கார்டு, சாம்சங் ஆக்ஸிஸ் பேங்க் இன்ஃபினிட் கிரெடிட் கார்டு, சாம்சங் ஆக்ஸிஸ் பேங்க் சிக்னேச்சர் கிரெடிட் கார்டு, ஸ்பைஸ்ஜெட் ஆக்ஸிஸ் பேங்க் வாயேஜ் பிளாக் கிரெடிட் கார்டு, ஸ்பைஸ்ஜெட் ஆக்ஸிஸ் பேங்க் வாயேஜ் கிரெடிட் கார்டு மற்றும் ஆக்ஸிஸ் பேங்க் ஷாப்பர்ஸ் ஸ்டாப் கிரெடிட் கார்டு போன்ற இணை பிராண்டு கிரெடிட் கார்டுகளுக்கு பொருந்தும். இணை பிராண்ட் கூட்டாளிகள் மைல்ஸ் அண்ட் மோர், விஸ்தாரா ஏர்லைன்ஸ், சாம்சங், ஸ்பைஸ்ஜெட் மற்றும் ஷாப்பார்ஸ் ஸ்டாப்.

ஆக்ஸிஸ் பேங்க் பலவிதமான அம்சங்கள் மற்றும் பயன்களுடன் கிரெடிட் கார்டுகளை வழங்குகிறது. ஆக்ஸிஸ் பேங்க் வவுச்சர்கள்/ தள்ளுபடிகள்/கேஷ் பேக்குகள்/மெம்பர்ஷிப்புகள்/கார்டு பாதுகாப்பு திட்டங்கள், கிரெடிட் ஷீல்டுகள், சுகாதார திட்டங்கள் போன்ற காப்பீட்டு விருப்பங்கள் மூலமாக கார்டுதாரருக்கு தயாரிப்பு அம்சங்கள்/பயன்கள்/மற்ற மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளை வழங்க ஆக்ஸிஸ் பேங்க் ஒப்பந்த அடிப்படையில் பல சேவை வழங்குபவர்களை பயன்படுத்துகிறது. கார்டுதாரர் ஆக்ஸிஸ் பேங்குக்கு சேர்க்கைக்காக, கார்டு அம்ச நிறைவேற்றுதல், விற்பனை, விள்ம்பரப் படுத்துதல் மற்றும் பயன்களை மீட்க, வெளிப்படையாக ஒப்புதலளித்து மற்றும் கார்டுதாரரின் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் மிக முக்கியமான தனிப்பட்ட தகவல்கள் (“தனிப்பட்ட தரவு”) உள்ளிட்ட தனிப்பட்ட தரவுகளை பெற, சேகரிக்க, செயலாக்க, பதிவு செய்ய,ஆக்ஸிஸ் பேங்கின் அங்கீகரிக்கப் பட்ட சேவை வழங்குனர்களுடன் பகிர மற்றும் வெளிப்படுத்த ஆக்ஸிஸ் பேங்குக்கு அங்கீகாரம் அளித்துள்ளனர். கார்டுதாரர் இந்த ஒப்புதல் ஆக்ஸிஸ் பேங்க் நியோ கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் மை ஸோன் கிரெடிட் கார்டு, இந்தியன் ஆயில் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் நியோ கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் மை ஸோன் கிரெடிட் கார்டு, இந்தியன் ஆயில் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் ரிவார்ட்ஸ் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் அட்லாஸ் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் செலக்ட் கிரெடிட் கார்டு ஆக்ஸிஸ் பேங்க் பிரிவிலேஜ் கிரெடிட் கார்டு ஆக்ஸிஸ் பேங்க் இன்ஃபினிட் ரிசர்வ் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் மேக்னஸ் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேக் பிரைட் (Pride ) கிரெடிட் கார்டுகள், ஆக்ஸிஸ் பேங்க் அட்வான்டேஜ் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் ஆரா கிரெடிட் கார்டு போன்ற எல்லா பொருந்தும் கிரெடிட் கார்டுகளுக்கும் செல்லுபடியாகும் என புரிந்து கொண்டு ஒப்புக் கொள்கிறார்.

ஆக்ஸிஸ் பேங்க் காப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து, தொலைந்து போன கார்டுகள், கார்டு மோசடிகள் போன்றவற்றால் ஏற்படும் பொறுப்புகளுக்கு ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டுகளுடன் காப்பீட்டு பாதுகாப்பை வழங்குகிறது. (“இன்ஷ்யூரன்ஸ் கவர்”). கார்டுதாரர் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டுடன் அது போன்ற காப்பீட்டுப் பாதுகாப்பை பெற விரும்பினால், கார்டுதாரர் கீழ்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை படித்து, புரிந்து கொண்டு, ஒப்புக் கொண்டதாக உறுதியளிக்கிறார்:

i. கார்டுதாரர் தன் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு மீதான காப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு அழைப்பதற்கும், தொடர்பு கொள்வதற்கும் மற்றும் கார்டுதாரரின் தனிப்பட்ட தரவை அத்தகைய காப்பீட்டைப் பெற (“நோக்கம்”) செயலாக்குவதற்கும், அவன்/அவள் தனிப்பட்ட தரவை, ஆக்ஸிஸ் பேங்கின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநருடன் மற்றும்/அல்லது இணைந்த காப்பீட்டு நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ள இதன் படி தன் வெளிப்படையான ஒப்புதலை வழங்குகிறார்.

ii.ஆக்ஸிஸ் பேங்க் கார்டுதாரரின் தனியுரிமையை பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறது மற்றும் பொருந்தக் கூடிய தரவு பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின் படி எந்த தனிப்பட்ட தரவும் ஆக்ஸிஸ் பேங்கின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநருடன் மற்றும்/அல்லது இணைந்த காப்பீட்டு நிறுவனங்களுடன் மட்டுமே பகிர்ந்து கொள்ளப் படும். ஆக்ஸிஸ் பேங்க் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர் / இணைந்த காப்பீட்டு நிறுவனங்கள் தனிப்பட்ட தரவை குறிப்பிட்ட நோக்கத்திற்காக பகிர்ந்து கொள்ளும் அதே நேரத்தில், அவற்றை பாதுகாக்க தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பயன்படுத்த வேண்டும்.

iii. இந்த நோக்கத்திற்காக செய்யும் இது போன்ற அழைப்புகளின் அதிர்வெண் நியாயமானதாகவும் மற்றும் தொடர்புடைய விதிமுறைகளுக்கு இணங்கவும் இருக்கும் என்பதை ஆக்ஸிஸ் பேங்க் உறுதிப் படுத்திக் கொள்ளும் என உறுதியளிக்கிறது. கார்டுதாரருக்கு எந்த வித சிரமமுமின்றி மதிப்புள்ள தகவல்களை வழங்க ஆக்ஸிஸ் பேங்க் பாடுபடுகிறது.

iv.இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றியமைக்க ஆக்ஸிஸ் பேங்க் உரிமை பெற்றிருக்கிறது. எந்த மாறுதலும் கார்டுதாரருக்கு பொருத்தமான சேனல்கள் மூலமாக தெரியப் படுத்தப் படும்.

கிரெடிட் கார்டு ஒப்புதலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நேரம் மாறுபடலாம் என்றாலும் விண்ணப்ப தேதியிலிருந்து கார்டு டெலிவரி TAT 14 நாட்கள் ஆகும் என கார்டுதாரருக்கு இதன்படி அறிவிக்கப் படுகிறது.

கார்டுதாரர் அவர் பெயரில் பதிவு செய்யப் பட்ட ஒரு மொபைல் எண்ணை கிரெடிட் கார்டு விண்ணப்பத்தில் வழங்கியுள்ளதாக ஒப்புகொள்கிறார். அந்த மொபைல் எண் அவர் பெயரில் பதிவு செய்யப் படவில்லை என பின்னர் கண்டு பிடிக்கப் பட்டால், கிரெடிட் கார்டில் உள்ள மொபைல் எண் மூலமாக செய்யப் பட்ட எந்தவொரு செயல்பாடு/பரிவர்த்தனைக்கும் அவரே பொறுப்பாவார்.

ஆக்ஸிஸ் பேங்க் இந்திய வங்கி குறியீடுகள் மற்றும் தர நிலைகள் வாரியத்தின் ஒரு உறுப்பினராக உள்ளது (BCSBI). BCSBI குறியீட்டின் கீழ் எங்கள் அர்ப்பணிப்பைக் காண, எங்கள் வலை தளத்தின் முகப்பு பக்கத்தை பார்வையிடவும்.

**M) நடுவர் பிரிவு**

இந்த பரிவர்த்தனைகளிலிருந்து எழும் அனைத்து தகராறுகள், மாறுபாடுகள் மற்றும்/அல்லது உரிமைகோரல்கள் அல்லது கேள்விகள், அல்லது எந்த விதத்திலாவது இதைப் பற்றியதாக இருந்தாலோ அல்லது இதனால் உருவாக்கப் பட்டாலோ அல்லது இதன் கீழான கட்சிகளின் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் நடுவர் மன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டு

ஆர்பிட்ரேஷன் மற்றும் கான்சிலியேஷன் ஆக்ட், 1996-ல் வழங்கியுள்ள படி, அல்லது அதன் சட்ட திருத்தங்களின் படி கடன் வழங்குபவர்/வங்கி-யால் நியமிக்கபடும் ஒரு தனி நடுவர் மன்றத்தால் தீர்த்து வைக்கப்படும். மற்றும் அது போன்று நியமிக்கப் பட்ட நபரின் இறப்பு, விருப்பமில்லாமை, மறுப்பு, புறக்கணிப்பு, நடுவராக செயல் பட இயலாமை போன்ற சூழ் நிலைகளில் கடன் வழங்குபவர்/வங்கி, ஒரு புதிய நடுவரை தனி நடுவராக நியமனம் செய்யலாம். நடுவர் தீர்ப்புக்கான எந்த காரணத்தையும் அளிக்கத் தேவையில்லைமற்றும் நடுவரது தீர்ப்பே இறுதியானது மற்றும் சம்பந்தப்பட்ட எல்லா கட்சிகளையும் கட்டுப்படுத்தும். நடுவர் தீர்ப்பாயத்தின் நடவடிக்கைகள் மும்பையில் மட்டுமே நடைபெறும்.

**N) தடை பிரிவு**

சர்வதேச கிரெடிட் கார்டுகளை இணையத்திலோ அல்லது வேறு வழியிலோ, லாட்டரி டிக்கட் போன்ற தடை செய்யப்பட்ட பொருட்கள், தடை செய்யப்பட்ட அல்லது தடை விதிக்கப்பட்ட பத்திரிகைகளை வாங்குவதற்கோ, ஸ்வீப்ஸ்டேக்குகளில் பங்கேற்பதற்கு, திரும்ப அழைக்கும்படியான சேவைகளுக்கு பணம் செலுத்துவதற்கு, மற்றும்/அல்லது எந்த பொருட்கள்/ செயல்பாடுகளுக்காவது அன்னிய செலாவணியில் பணம் எடுப்பதற்கு அனுமதி மறுக்கப் பட்டிருந்தாலோ, அவற்றிற்கோ பயன்படுத்த முடியாது.

**O) FEMA (ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் மேனேஜ்மெண்ட் ஆக்ட்)**

i) இந்தியாவிற்கு வெளியேயான பரிவர்த்தனைக்கு கார்டின் பயன்பாடு Exchange Control Regulations of the RBI and the Foreign Exchange Management Act, 1999 உள்ளிட்ட பொருந்தக் கூடிய சட்டத்தின் படி இருக்க வேண்டும் மற்றும் அது போல செய்யத் தவறினால், நீங்கள் தண்டனைக்குரிய நடவடிக்கைகளுக்கு ஆளாக நேரிடும்.

ii) அன்னிய செலாவணி வர்த்தகத்திற்கு கிரெடிட் கார்டை நேரடியாக பணம் செலுத்தவோ/ மின்னணு/இணைய வர்த்தக போர்டல்கள் மூலம் மறைமுகமாகவோ பயன் படுத்த முடியாது. ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின் படி இது தடை செய்யப்ப.ட்டது. மேலும் விவரங்களுக்கு, எங்கள் வலைதளத்தினுள் நுழையவும்.

iii) இந்த கார்டு, இந்தியா மற்றும் அயல் நாடுகளில் உபயோகத்திற்கு செல்லுபடியாகும். எனினும், இது, நேபால் மற்றும் பூடானில் அன்னிய செலாவணி பரிவர்த்தனைகளை செய்வதற்கு செல்லுபடியாகாது.

iv) NRI வாடிக்கையாளர்கள் கட்டாயமாக ஆக்ஸிஸ் பேங்க் NRE கணக்கிலிருந்து தானியங்கி பணம் செலுத்தும் முறையில் மட்டுமே 100% பணம் செலுத்த வேண்டும்.

v) NRI வாடிக்கையாளர்களுக்கு ரொக்கமாக செலுத்துதல் ஒப்புக் கொள்ளப் பட மாட்டாது.

**P) கார்டு கணக்கில் அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கிப் பரிவர்த்தனைகள்.**

1) வங்கிக்கு செல்லுபடியாகும் மொபைல் எண்களை வழங்காத வாடிக்கையாளர்களுக்கு, வங்கி, ஏடிஎம்மில் பணம் எடுப்பதை தவிர வேறு மின்னணு பரிவர்த்தனைகளுக்கான வசதியை வங்கி அளிக்காது.

2) வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட பரிவர்த்தனைகளில்/ ஏதேனும் அறிக்கையின்/ஆவணங்களின் படியான இருப்ப தொடர்பான விவரங்களில் ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால், அவர்கள் அதை வங்கிக்கு 7 நாட்களுக்குள் எழுத்துபூர்வமாக தெரிவிக்க வேண்டும்.

3) வங்கிக்கு ஏழு (7) நாட்களுக்கு பிறகு முரணான தகவல் ஏதேனும் கிடைத்தால், வாடிக்கையாளரது பொறுப்பு, வங்கியின் இணைய தளத்தில் கிடைக்கும் வங்கியின் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையின் படி நிர்ணயிக்கப்படும்.

4) இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி வங்கியால் பராமரிக்கப்பட்ட, மின்னணு அல்லது ஆவண வடிவிலான, உங்கள் அறிவுறுத்தல்களின் பதிவுகள் மற்றும் இது போன்ற இதர விவரங்கள் (செலுத்திய மற்றும் பெற்ற பணம் உள்ளிட்ட ஆனால் அது மட்டுமேயல்லாத), உங்களுக்கு எதிரான, அது போன்ற அறிவுறுத்தல்கள் மற்றும் இதர விவரங்களின் உறுதியான சான்றாகக் கருதப்படும்.

5) புகாரளிக்கப்பட்ட நேரம் மற்றும்/அல்லது மேற் கூறப்பட்ட கணக்கில் செய்யப்பட்ட பரிவர்த்தனை/கள் அல்லது இந்த கணக்கு தொடர்பான வேறு ஏதேனும் விஷயம் போன்றவை தொடர்பான தகராறில், சரியான நேரத்தையும் மற்றும்/அல்லது சர்ச்சைக்குரிய பரிவர்த்தனையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் உரிமை வங்கிக்கு உண்டு. மற்றும் மூன்றாம் தரப்பு மோசடியால் உங்கள் கார்டு கணக்கில் நிகழ்ந்த அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளில் உங்கள் பொறுப்பு அல்லது நிகழ்ந்த மோசடியில் உங்கள் பங்கு இல்லையென்றால் உங்கள் பொறுப்பு “வாடிக்கையாளர் பாதுகாப்பு – அங்கீகரிக்கப் படாத மின்னணு வங்கி பரிவர்த்தனைகளில் வாடிக்கையாளர்களின் வரையறுக்கப் பட்ட பொறுப்பு” என்ற RBI சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களின் படி இருக்கும். அவ்வப்போது திருத்தப்படும் விதிமுறைகளில் வரும் மாற்றங்கள் அந்த நேரத்தில் பொருந்தும் மற்றும் கட்டுப்படுத்தும்.

6) நுகர்வோர் சேவைக்கு / நுகர்வோர் தீர்வுக்கு தொடர்பு விவரங்களுக்கு, எங்கள் வலைதளம், www.axis.bank.in/support -ஐ நோக்கவும்.

**Q) பாதுகாப்பான கிரெடிட் கார்டுகள்**

1) நிலையான வைப்புத் தொகை, வாடிக்கையாளரிடமிருந்து வங்கிக்கு பாதுகாப்பான கிரெடிட் கார்டுகள் மற்றும் வங்கியால் வழங்கப் பட்ட எந்த வசதிகளின் கீழும் நிலுவையில் இருக்கும் மொத்த இருப்புக்கும் ஒரு தொடர்ச்சியான பாதுகாப்பாக செயல்படும்.

2) தவணை தவறினால் அல்லது கடன் வசதி அல்லது வசதிகள் கோரிக்கையின் பேரில் திரும்ப செலுத்தப் படா விட்டால், வங்கி நிலையான/கால வைப்புத் தொகையை முன் கூட்டியே பணமாக்க அனைத்து தேவையான நடவடிக்கைகளையும் எடுக்கும் அல்லது பத்திரங்கள்/ நிலையான அல்லது கால வைப்புத் தொகை எதிரீடாக எந்த நேரத்திலும் வழங்கப் பட்டு அல்லது வைத்திருக்கப் பட்டு அல்லது மாற்றப்பட்டு /ஒதுக்கப்பட்டு அல்லது நியாயமாக கருதப்பட்டு மறு ஒதுக்கீடு செய்யப்பட்டு மற்றும் நிகரத் தொகையை வாடிக்கையாளரின் கணக்கில் உள்ள பொறுப்புகளின் தீர்வுக்கு வங்கியின் எந்தக் கிளையிலாவது செலுத்தலாம்.

3) வாடிக்கையாளரின் தகுதியின் அடிப்படையில் வங்கியின் தனிப்பட்ட விருப்பத்தில் பாதுகாப்பான கிரெடிட் கார்டுடன் இணைக்கப்பட்ட நிலையான வைப்புத் தொகையின் மீதான உரிமையை விலக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**R) சிறப்புக் குறிப்பு கணக்கு(SMA) மற்றும் செயல்படாத சொத்து NPA)**

ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின் படி கடன் வழங்குபவர்கள், கடன் வாங்குபவர்களின் கணக்கில் அழுத்தத்தின் ஆரம்பத்தை தவறுதல் ஆரம்பித்தவுடனேயே அடையாளங் கண்டு அதை சிறப்பு குறிப்பு கணக்காக (SMA) வகைப் படுத்த வேண்டும். கடன் வாங்குபவரின் கணக்குகளை SMA மற்றும் NPA என வகைப்படுத்துதல் தொடர்புடைய தேதியின் நாள்-இறுதி செயலாக்கத்தின் ஒரு பகுதியாக நடத்தப் படும் மற்றும் SMA அல்லது NPA என வகைப்படுத்தும் தேதியே நாள்-இறுதி செயலாக்கம் நடைபெறும் காலண்டர் தேதியாகும். அதன்படி, SMA / NPA -யின் தேதி அந்த நாள் இறுதியில் அந்த கணக்கின் வகை ஒப்புதலை பிரதிபலிக்கும். அது போன்ற வகைப் படுத்தலின் ஒரு எடுத்துக்காட்டு பின் வருமாறு:

- **SMA 0 -** ஒரு கணக்கின் நிலுவைத் தேதி மார்ச் 31, 2021 என்றால், மற்றும் இந்த தேதியில் முழு நிலுவைத் தொகையும் பெறப் படவில்லையென்றால், அந்த கணக்கு மார்ச் 31, 2021-ன் நாள் முடிவில் SMA 0-வாக இருக்கும்.

- **SMA 1 -** இந்த கணக்கு தொடர்ந்து நிலுவையில் 30 நாட்கள் இருக்கும் பட்சத்தில், அதாவது ஏப்ரல் 30,2021 அன்று வரை நிலுவையில் இருந்தால் பின்னர் இந்த கணக்கு SMA-1 என பெயரிடப்படும்.

- **SMA 2 -** இந்த கணக்கு தொடர்ந்து நிலுவையில் இருந்து வந்தால், மே 31, 2021-ல் இதற்கு SMA -2 என பெயரிடப்படும்.

- **NPA-** அதற்கும் மேலும் கணக்கு தொடர்ந்து நிலுவையில் இருந்தால், ஜூன் 29, 2021-ல் அது NPA-வாக வகைப் படுத்தப் படும்.

ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின் படி, கணக்குகளை NPA-வாக வகைப் படுத்துவது கடன் வாங்குபவர் அடிப்படையில், மற்றும் வசதி அடிப்படையில் அல்ல. எனவே, வாடிக்கையாளரால் வங்கியிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் ஒரு வசதிக்கான நிலுவைத் தொகை செலுத்தப் படவில்லையென்றால், மற்றும் தொடர்ந்து அந்தக் கணக்கு NPA-வாக வகைப்படுத்த பட்டால், அந்த வங்கியிலுள்ள வாடிக்கையாளரின்/ கார்டுதாரரின் மற்ற எல்லா கடன்/கிரெடிட் கார்டு கணக்குகளும் NPA-வாக வகைப் படுத்த படும் மற்றும் அது வங்கியை அது போன்ற அனைத்து கடன்/ கிரெடிட் கார்டு/வசதிகளையும், அந்த கணக்குகளில் ஒழுங்காக பணம் செலுத்தப் பட்டிருந்தாலும் திரும்பப் பெற உரிமை உண்டு.

**S) பிராந்திய மொழியில் மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

பிராந்திய மொழியில் மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மீதான தகவலுக்கு, https://www.axis.bank.in/important-links/credit-card/terms-and-conditions ஐ பாருங்கள். கிடைக்க கூடிய விருப்பத் தேர்வுகள் 1) மராத்தி 2) ஹிந்தி 3) பெங்காலி 4) குஜராத்தி 5) மலையாளம் 6) தமிழ் 7) தெலுங்கு 8)கன்னடம்

இதன் படி www.axis.bank.in-இல் பிராந்திய மொழியில் கிடைக்கும் மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஆங்கில பதிப்பின் பிரதி நிதித்துவ உரை என கார்டுதாரர் ஒப்புக் கொண்டு ஏற்றுக் கொள்கிறார்.

ஆங்கிலத்தில் மற்றும் பிராந்திய மொழிகளில் வழங்கப் பட்டிருக்கும் மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கிடையே ஏதேனும் மாறுபாடு அல்லது முரண்பாடு இருந்தால், ஆங்கில பதிப்பே மேலோங்கும் மற்றும் கார்டுதாரரை கட்டுப்படுத்தும் என கார்டுதாரர் ஒப்புக் கொண்டு ஏற்றுக் கொள்கிறார்.

பிராந்திய மொழிகளில் வழங்கப் பட்டிருக்கும் மிக முக்கியமான

மராத்தி - https://www.axis.bank.in/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-marathi.pdf

ஹிந்தி -https://www.axis.bank.in/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-hindi.pdf

பெங்காலி - https://www.axis.bank.in/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-bengali.pdf

குஜராத்தி - https://www.axis.bank.in/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-gujarati.pdf

மலையாளம் - https://www.axis.bank.in/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-malayalam.pdf

தமிழ் - https://www.axis.bank.in/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-tamil.pdf

தெலுங்கு -https://www.axis.bank.in/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-telugu.pdf

கன்னடம் - https://www.axis.bank.in/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-kannada.pdf

**மறுப்பு:**

வங்கி, அதன் ஊழியர்கள், முகவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் எந்தவொரு இழப்பு அல்லது சேதத்திற்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அல்லது அவற்றின் விளைவாகவோ ஏற்படும், வருவாய், லாப, வணிக, ஒப்பந்தங்கள், எதிர்பார்த்த சேமிப்புகள் அல்லது நல்லெண்ண இழப்பு, மென்பொருள் உள்ளிட்ட ஏதேனும் சாதனத்தின் பயன்பாடு அல்லது மதிப்பிழப்பு, உள்ளிட்ட ஆனால் அவை மட்டுமே அல்லாத இழப்புகளுக்கும் பொறுப்பாக மாட்டார்கள். முன் கூட்டியே எதிர்பார்க்க பட முடிந்தாலும் இல்லாவிட்டாலும் பயனர் அல்லது வேறு ஒரு நபரால் அனுபவிக்கப்பட்ட இழப்பு, ஏதேனும்

தாமதத்தால், இடைவேளையால், இடை நிறுத்தத்தால், அல்லது வங்கி கோரிக்கையை பெற்று செயலாக்குவதில், மற்றும் பதில்களை உருவாக்கி திருப்பி அனுப்புவதில் விளைந்த தவறு அல்லது ஏதேனும் பழுதடைவு, தாமதம், இடைவேளை, இடை நிறுத்தம் கட்டுப்பாடு அல்லது, பயனரின் தொலைத்தொடர்பு சாதனத்திலிருந்து அனுப்ப பட்ட அல்லது பெறப்பட்ட தகவல் அல்லது செய்தியில் மற்றும் எந்த சேவை வழங்குனரின் நெட்வொர்க், மற்றும் வங்கியின் சிஸ்டத்தில் விளைந்த தவறு மற்றும்/அல்லது அத்தகைய சேவை வழங்கும் ஏதேனும் மூன்றாம் தரப்பினரது தவறு போன்றவற்றிற்கும் வங்கி, அதன் ஊழியர்கள், முகவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பொறுப்பாக மாட்டார்கள். ஆக்ஸிஸ் பேங்க் அதன் தனிப்பட்ட முடிவில், வெளிப்புற சேவை வழங்குனர்/கள் அல்லது முகவர்/களது சேவைகளை தேவைப்படும் முறையில், அதன் தயாரிப்புகள் தொடர்பாக உபயோகிக்கலாம்.

•ஆக்ஸிஸ் பேங்க் விண்ணப்ப படிவத்தின் நிலையை 21 வேலை நாட்களுக்குள் தெரியப் படுத்தும்.

• ஆக்ஸிஸ் பேங்க் எந்தவொரு வாணிபத்திற்காகவும், பரிசுகள், வவுச்சர்கள், வெகுமதிப் புள்ளிகளை மீட்டெடுத்தல், கார்டு செயலாக்கம் அல்லது ரத்து தொடர்பாக கார்டு CVV, PIN, OTP அல்லது இன்டர் நெட் கடவுச்சொல்லை கேட்காது. தொலைபேசியில் அல்லது மின்னஞ்சலில் அது போன்ற வேண்டுகோள்களை தயவுசெய்து புறக்கணிக்கவும். ஆக்ஸிஸ் பேங்க் அதிகாரபூர்வ வலைதளத்தில் எந்த கடித பரிமாற்றத்திற்கும் முன்பு தொடர்பு எண்களை சரிபார்த்துக் கொள்ளவும்.

• எந்த ஆன்லைன், மின்-வணிக பரிவர்த்தனைகளுக்கும் முன்பு வலைதளம் மற்றும்/அல்லது போர்ட்டலின் நம்பகத்தன்மையை உறுதிப் படுத்திக் கொள்ளவும். உங்களை ஏமாற்றி, பண மோசடி செய்யும் போலி வலைதளங்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.

• வங்கியால் வழங்கப்பட்ட கார்டு வாடிக்கையாளரின் தனிப்பட்ட உபயோகத்திற்கு மட்டுமே. ஒரு மூன்றாம் தரப்பினரின் சார்பாகவோ அல்லது நன்மைக்கோ செய்யப்படும் பரிவர்த்தனைகளை வங்கி ஊக்குவிக்கவோ அல்லது ஆதரிக்கவோ செய்யாது .

• சர்வதேச பரிவர்த்தனைகளில், வணிகர் பணத்தை திரும்ப தந்தால்/ தகராறுகள் ஏற்பட்டால், நாணய ஏற்ற இறக்கத்தால் விளையும் எந்த விகித வேறுபாட்டையும் வாடிக்கையாளரே ஏற்க வேண்டும்.

***ஆவண முடிவு***

**தொடர்பு சேனல்கள்**

**வாடிக்கையாளர் சேவை**

18605005555 அல்லது 18604195555 (கட்டணங்கள் பொருந்தும்) அல்லது 18001035577 (கட்டணமில்லா) இந்தியாவில் எந்த லேண்ட்லைன் அல்லது செல்ஃபோன்

ஏஸ் கிரெடிட் கார்டுக்கு: 18604191919 (கட்டணங்கள் பொருந்தும்)
பர்கண்டி பிரைவேட் கார்டுகளுக்கு: 18002108888 (கட்டணமில்லாத)
பிரீமியம் கார்டுகளுக்கு: விஸ்தாரா இன்ஃபினிட், ரிசர்வ்,செலக்ட், அட்லஸ், மைல்ஸ் அண்ட் மோர் வேர்ல்ட் செலக்ட் மற்றும் இன்ஃபினிட்,தயவு செய்து தொடர்பு கொள்ளவும்: 1800 419 0065

+91-22-27648000 இந்தியாவுக்கு வெளியில் இருந்து தொடர்பு கொள்ளலாம்.

ஏஸ் கிரெடிட் கார்டுக்கு மின்னஞ்சல் முகவரி:
service.acecard@axis.bank.in

எல் ஐ சி கார்டுகளுக்கு: 18004190064
வங்கியைத் தொடர்பு கொள்ள, இந்த இணைப்பினுள் நுழையவும்:
https://application.axis.bank.in/webforms/axis-support/index.aspx

**குறை தீர்த்தல்/அதிகரித்தல்**

பெறுநர்,

பெறுநர், திரு.ஜினித் தக்கர், நோடல் அதிகாரி.`

ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட், NPC1, 5-வது மாடி, கிகாபிளெக்ஸ், பிளாட் எண். I.T.5. MIDC. Airoli Knowledge Park, Airoli, நவி மும்பை 400708.
மின்னஞ்சல் முகவரி: nodal.officer@axis.bank.in, தொலைபேசி. 91-080-61865200.
நேரம்: 9.30 am முதல் 5:30 pm (திங்கள் முதல் வெள்ளி வரை)

9.30 am முதல் 2.00 pm (சனிக்கிழமை) வங்கி விடுமுறைகள் தவிர

**குறை தீர்க்கும் அதிகாரி**

பெயர் : திரு. ஆஷிஷ் ராஜ்புட்
பதவி : அசிஸ்டண்ட் வைஸ் பிரசிடெண்ட்
முகவரி: ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட், NPC1, 5-வது மாடி, கிகாபிளெக்ஸ், பிளாட் எண். I.T.5. MIDC. Airoli Knowledge Park, Airoli, நவி மும்பை 400708.

தொடர்பு எண்: 8061865200
நேரம்: 9.30 am முதல் 5:30 pm திங்கள் முதல் சனி (இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகள் மற்றும் வங்கி விடுமுறைகள் தவிர)
மின் அஞ்சல்: nodal.officer@axis.bank.in

எந்தவொரு குறைக்கும் பொருந்தும் எந்த இழப்பீடும் https://www.axis.bank.in/docs/default-source/default-documentlibrary/ Customer-Compensation-Policy.pdf-இல் உள்ள வங்கியின் இழப்பீட்டு கொள்கையின் படி வழங்கப்படும்.

***ஆவண முடிவு*** O002504829_05_24